பாவம் - நூறு எம்.எல்.ஏ.-க்கள்!

12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 14—5—1978 | இதழ் 35

126 சட்டமன்ற உறுப்பினர்களில் நூறுபேர் விடப்பட்டு விட்டனர். தமிழக முதல்வர் இதை மீண்டும் திரும்பப் பரிசீலித்து ஆக வேண்டும்.

அவர்கள் மட்டும் என்ன தவறு செய்து விட்டார்கள்? ஏ ன் அவர்களுக்கு மட்டும் அமைச்சரவையில் இடமில்லை?

எத்தனையோ புதிய யுக்திகளைத் தம் ஆட்சியில் புகுத்தி வரும் புரட்சி முதல்வர் இந்தக் காளயுக்தி ஆண்டிலாவது ஒரு கனிவான முடிவைத் தெளிவாக அறிவிப்பார் என்றல்லவா எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்!

கருணையே வடிவான ஒரு முதல்வர், அதுவும் கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரத்தையுடையவர், நூறு பேரை ஏமாற்றுவது என்பது விளையாட்டாக ஒதுக்கிவிடக்கூடிய ஒரு விவகாரமல்ல. நாட்டிலுள்ள நாலரைக் கோடித் தமிழர்களும் ஆழ்ந்த கவலையோடு சிந்திக்க வேண்டிய பிரச்சினையாகும் இது!

சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளத்தில் எழும் சில நியாயமான கேள்விகளை தமிழக முதல்வர் கருதிப் பார்க்க வேண்டும்.

1 எல்லா உறுப்பினர்களும் ஏறத்தாழ ஒத்த வயது உடையவர்கள்!

[கட்சி வயதையே இங்கு

செகந்தப்பன்

குறிப்பிடுகிறேன். ஆறுண்டுகளுக்கு மேற்பட்ட கட்சி உறுப்பினர் அங்கு யாரும் இருக்க முடியாது']

எனவே கட்சிக்கு முந்தி வந்தவர் பிந்தி வந்தவர் என்ற பாகுபாட்டிற்கு அதிக இடமில்லை.

2. யாவரும் தலைமையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளவர்கள்!

இல்லையென்றால் ஒரு நியமனத் தலைமையை ஆறுண்டுகளாகப் போற்றி வருவார்களா? தலைவர் கட்டளைக்குப் பணிந்து பச்சைதான் குத்திக் கொள்வார்களா?

3 படிப்பில் உறுப்பினர்களிடையே சற்று ஏற்றத் தாழ்வு இருக்கலாம்; ஆனால் பக்குவத்தில் எல்லோரும் ஒரே மாதிரியானவர்களே!

யாவரும் புரட்சித் தலைவர் பள்ளியில் படித்தவர்கள்! அவர் மனமறிந்து நடக்கக் கற்றவர்கள்!

4. நிர்வாக அனுபவம் என்பது அங்குள்ள எவருக்குமே இல்லாத ஒன்றுதான்! எனவே இதில் உறுப்பினரிடையே பாகுபாடு காண்பது தகாது!

5 எல்லோருமே தேர்தலில் மொத்தச் செலவு செய்தவர்கள்!

தோற்றவர்கள் சும்மா இருக்கலாம்; ஆனால் வென்றவர்கள் குறைந்தபட்சம் ஒரு துணை அமைச்சர் பதவியையாவது எதிர்பார்ப்பதில் என்ன தவறு?

இப்படியெல்லாம் எண்ணி ஆளும் கட்சி உறுப்பினர்கள் நெஞ்சம் குமுறுகிறார்கள்.

எல்லோருக்கும் மந்திரிப் பதவியா? இது நடக்கக் கூடிய காரியமா? — என்றெல்லாம் சிலர் நினைக்கக் கூடும். ஆனால் நடப்பது புரட்சித்தலைவர் ஆட்சி என்பதை நாம் மறந்து விடுவதற்கு இல்லை.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் யாவரும் அமைச்சர்கள் ஆகக்கூடாது என்று எந்தச் சட்டத்தில் இருக்கிறது? நமது முதல்வர் இதை எண்ணிப் பார்க்கத் தவறி விட்டார் என்றே தோன்றுகிறது!

சட்டத்தில் நடிப்பதற்கு தடையில்லை என்பதைத் தெரிந்து 'உன்னை விட மாட்டேன்' எனப் படவுலகை நோக்கிப் பயணம் செய்யும் நாடாளும் நாயகனுக்கு தம் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அமைச்சர்களாக்குவதா ஒரு பெரிய காரியம்?

முதல்வர் உடனடியாக இதில் கவனம் செலுத்தி, விடப்பட்டுள்ள நூறு எம். எல். ஏக்களுக்கும் விரைவில் மந்திரிப் பதவிகளை வழங்க முன்வர வேண்டும்!

ஆளும் கட்சியினர் மன நிறைவுடன் கட்டுப்பாடு காத்துச் செயல்பட இது வழி வகுக்கும்.

மேலும் நமது பொன்மனச் செம்மலை எல்லாத் தரப்பு மக்களும் போற்றிப் புகழுவதற்குரிய ஒரு புதுமைத் திட்டமாகவும் இது அமையும்!

இலாக்காக்களுக்கு எங்கே போவது என்று சிலர் கருதலாம். இருக்கிற இலாக்காக்களைத் துண்டு போடவோ அல்லது இல்லாதவற்றை உண்டாக்கவோ தெரியாதவர் அல்லர் நமது முதல்வர். தேவைப்பட்டால் ஒரு துறையையே மூன்று நான்கு பேர் சேர்ந்து கவனிக்கவும் ஏற்பாடு செய்யலாம். வேலைப்பளு குறைவதோடு ஒவ்வொரு அமைச்சரும் தனியாக ஏதேனும் தொழில்செய்யவும் வசதியாக இருக்கும் அல்லவா?

விரைவில் புரட்சி முதல்வரின் இந்தப் புதுமைத்திட்ட அறிவிப்பை எதிர்பார்ப்போமாக.



புதிய பாதையில் ஆப்கன் நாடு!

நூர் முகமது தராகி ஆப்கன் மக்களின் இன்றைய ஆட்சித் தலைவராகியிருக்கிறார். புதிய ஆட்சியைப் படைத்த புரட்சித் தலைவர் இவர். ஆம்! இராணுவ ஆட்சியின் தலைவர். விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த இவர் பொருளாதாரத்தில் பட்டம் பெற்றவர்; முயற்சி மிகவும் உடையவர்; முற்போக்கு எண்ணம் படைத்தவர்; எழுச்சி மிக்க எழுத்தாளர். செய்யும் தொழில் எதுவானாலும் சோர்வில்லாமல் செய்து முடிப்பவர். 'வேலை இல்லை' என்பதே இவர் அகராதியில் இல்லை. இழிவான தொழில் என்று கருதாமல் வீட்டு வேலைக்காரராகவும் வேலை புரிந்திருக்கிறார்!

அரசு செய்தி நிலைய நிர்வாகி ஆனார். அரசில் பணி புரிந்து கொண்டே 'விழிப் படைந்த இளைஞர் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு இயங்கத் தொடங்கினார்.

இந்திய நாட்டில் ஜனநாயகத்தைக் காத்திட இரண்டாம் விடுதலைப் போர் நடந்ததைப் போல் அங்கேயும் ஜனநாயகச் சுதந்திரத்தைப் பெறுவதையே அந்த இயக்கம் இலட்சியமாகக் கொண்டு இயங்கியது.

அந்த இயக்கம் முடியரசின் தாக்குதலுக்கு இலக்கானது. அதன் விளைவாக தராகி சிறையிலே தள்ளப்பட்டார்.

அவர் உள் நாட்டில் இருந்தால் தொல்லை எனக் கருதிய அரசு அயல் நாட்டுக்குத் தூதரக கலாச்சார அதிகாரியாக அனுப்பி வைத்தது. ஜனநாயகத்தைக் காத்திட அவர் தீட்டிய எழுத்தோவியம் தீயெனப் பரவியது. அவரது எழுத்தால் ஆட்சிக்குக் கேடு விளையலாம் என்று கருதிய அரசு தூதுவர் பொறுப்பிலிருந்து அவரைத் துரத்தியது.

பொறுப்பினை விட்டார்; ஆனால் நாடு திரும்பவில்லை., மூன்றாண்டுகள் அமெரிக்காவிலேயே தங்கினார். பின்னர் நாடு திரும்பினார். நாட்டின் நலத்தையே எண்ணி எழுதத் தொடங்கினார்.

1965 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள் மக்கள் ஜனநாயகக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது அரசியல் மீண்டும் அவருக்கு அழைப்பு விடுத்தது. அந்தக்கட்சியின் முன்னோடிகள் தராகியைத் தலைமைக்குத் தேர்ந்தெடுத்தனர். தலைமைக்குத் தகுதியான தராகி கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பினை ஏற்றார்.

தியாகத் தலைவர் கலைஞரைக் கண்டு காழ்ப்புக் கொண்ட நடிகத் தலைவர் போல அங்கும் ஒருவர் இருக்கிறார் போலும்! தலைமையில் ஏற்பட்ட வேறுபாடு காரணமாக இரண்டு ஆண்டுகளுக்குள்ளே மக்கள் ஜனநாயகக் கட்சி இரண்டாகப் பிரிந்தது. ஆட்சிக்குத் திட்ட அடிப்படையில் இரண்டு கட்சிகளும் ஆதரவு அளித்தன

இந்நிலையில் தேசியப் புரட்சிக் கட்சி நாட்டின் ஒரே கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது இதைத் தொடர்ந்து ஜனநாயகக் கட்சிகள் இரண்டும்தடை செய்யப்பட்டன.

ஆட்சியிலிருந்த தாவூத் இடதுசாரி நோக்கிலிருந்து மாறுபட்டார். இதன் விளைவாகப் பிரிந்துவிட்ட ஜனநாயகக் கட்சிகள் மீண்டும் இணைந்து விட்டன. தலைமறைவான அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டன.

கடந்த திங்கள் ஒரு கம்யூனிஸ்ட் தொழிற் சங்கத் தலைவர் கொலை செய்யப்பட்டார். இதை யொட்டி நாட்டில் எங்கும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அமெரிக்காவை எதிர்த்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன இதற்கெல்லாம் காரணம் தராகியாக இருக்கலாம் என்று எண்ணிய அரசு அவரைக் கைது செய்து சிறையிலே அடைத்தது 1978ஏப்ரல் 27 ஆம் நாள் ஆப்கன் தலைநகர் காபூலில் திடீரென்று புரட்சி வெடித்தது.

இராணுவம் அதிபர் தாவூத் மாளிகையை முற்றுகையிட்டது. நாற்பதுடாங்குகள் சூழ்ந்து கொண்டன இராணுவ வீரர்கள் குண்டுகளைப் பொழிந்தனர். மாளிகையை எரித்தனர். அது தரைமட்டமாகியது.

புரட்சியை முன்னின்று நடத்தியவர் விமானபடைத் துணை கமாண்டர் கர்னல் அப்துல் காதிர். இராணுவப் படையின் தளபதி என்று தன்னை அறிவித்துக் கொண்டார், வானொலி மூலமாக இரத்தப் புரட்சியில் இராணுவ புரட்சிக் குழு ஆட்சியைக் கைப்பற்றியது. அதிபர் முகமது தாவூதின் ஐந்து ஆண்டுக் கால ஆட்சி அகற்றப்பட்டது.

தாவூதும் அவரது குடும்பத்தினரும் அவரது அமைச்சர்களும் இப்புரட்சியில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இரண்டு நாட்களுக்குப் பின்னர் புரட்சிக் குழு தனது அதிகாரத்தை நிலை நாட்டியது.

முகம்மது தாவூத் 1973 ஆம் ஆண்டில் நடந்த புரட்சியில் ஆட்சிக்கு வந்தவர். அப்புரட்சியில் தீவிரமாகப் பங்கு கொண்டவரே இந்த கர்னல் அப்துல் காதிர்!

சிவப்பு நட்சத்திரச்சின்னங்களை அணிந்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள் சாலைகளில் காணப்பட்டனர் அமைதி நிலை திரும்ப அவர்கள் உதவினர்.

கர்னல் அப்துல் காதிரின் இராணுவ ஆட்சி இடதுசாரி போக்குடையது என்பதை இந்த இளைஞர் பட்டாளத்தின் நடமாட்டம் நாட்டிற்குச் சூசகமாக தெரிவித்தது.

காபூலில் சிலர் உடனே தூக்கிலிடப்பட்டார்கள் ஏராளமான நாவலர்கள் கைது செய்யப்பட்டனர் கல்லூரி மாணவர்கள் போக்குவரத்தை ஒழுங்கு டுத்தும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

அதிபர் முகமது தாவூதின் ஆட்சி மனித உரிமையைப் பறித்தது. கொடுமைநிறைந்த சித்திர வதை முறைகளைக் கையாண்டது என்றும் காபூல் வானொலி கூறியது.

தேசியப் புரட்சிக் குழுவின் தலைவரா்க நூர் முகம்மது தராகி இருப்பார் என்று வானொலி அறிவித்தது. தராகி நாட்டின் பிரதமராக இருப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது. தேசியப்புரட்சிக்குழுவில் புரட்சி ராணுவக் குழு இணைக்கப்பட்டது.

'ஆப்கானிஸ்தான் ஜனநாயகக் குடியரசு' என்று நாட்டிற்குப் பெயர் சூட்டப்பட்டது. இஸ்லாமிய

சா. கணேசன்

அடிப்படையில் அரசியல் சட்டம் இருக்கும். தனிநபர் உரிமைக்கும் உறுதி அளிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அடுத்து வந்த செய்தி நாட்டின் அதிபராக நூர் முகமது தராகி ஆக்கப்பட்டார், என்பதே. உறுதியான ஆதிக்கத்திலுள்ள ஆட்சியை அங்கீகரிப்பது என்ற கொள்கைக்கிணங்க இந்திய அரசு புதிய ஆப்கன் ஆட்சிக்கு அங்கீகாரம் வழங்கியது இதைத் தொடர்ந்து சோவியத் இரஷ்யாவும் அங்கீகாரம் அளித்துள்ளது.

வெற்றிகரமான விடுதலையைக் கொண்டாட மே முதல் நாளை விடுமுறை நாளாகப் புதிய ஆட்சி அறிவித்தது. அதிபர் தராகி இருபது பேர் கொண்ட அமைச்சரவையை நியமித்தார் அதிரடிப் புரட்சியை முன்னின்று நடத்திய கர்னல் அப்துல்காதிர் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார்!

ஆப்கானிஸ்தான் மே விழா நடத்தியது. தொழிலாளர் வர்க்க ஆட்சி, சமுதாய அமைப்பு, விஞ்ஞானப் புரட்சி ஆகிய கருத்துக்கள் அடங்கிய தத்துவங்களை வானொலி ஒலி பரப்பியது.

காபூலில் பிரதமர் தராகியின் தலைமையில் புதிய அமைச்சரவையின் முதல் கூட்டம் நடைபெற்றது.

"முன்னாள் அதிபர் முகமது தாவூத், அவரது குடும்பத்தினர் ஆகியோர் சேர்த்துக் குவித்துள்ள சொத்துக்களை எல்லாம் பறிமுதல் செய்து அரசுடைமையாக்க புதிய அரசு தீர்மானித்ததாக அறிவித்தது.

அதுமட்டுமின்றி தாவூத், அவரது சகோதரர் முகமது நயீம் உட்பட நாதிர் வம்சத்தின் எஞ்சிய ஐந்து பேர்களுடைய சொத்துக்களையும் பறிமுதல் செய்து அவற்றை அரசுடைமையாக்க அமைச்சரவை ஏகமனதாக முடிவு செய்தது.

உழைப்பாளர்களின் வியர்வை இரத்தம் சிந்தப்பட்டபோது இஸ்லாமிய மனிதப் பண்புகளுக்கு விரோதமாக அந்தச் சொத்துக்களைச் சேர்த்துக் குவித்ததாக மேலும் அந்த அமைச்சரவை விமர்சனம் செய்தது.

தராகி அமைச்சரவையின் அடுத்த நடவடிக்கை கல்விக் கொள்கையை வகுத்தது. இக் கொள்கையின் படி உயர்நிலைப்பள்ளியில் நுழைவுத் தேர்வு முறை ஒழிக்கப்பட்டது

வெளியே செல்லும் அஞ்சல் தந்திகளைத் தணிக்கை செய்வதை மேற்கொண்டது.

ஆப்கானிஸ்தான் அரசு எல்லா மத நிகழ்ச்சிகளையும் ரத்து செய்துவிட்டது. ஆனாலும் வானொலியில் ஒவ்வொரு நாளும் புனித குரானிலிருந்து சில வாசகங்களை எடுத்துக்கூறி தொடங்க முடிவு செய்திருக்கிறது.

இந்தப் புரட்சிக் குழுவில் இருபத்தொரு பேர் அங்கம் வகிக்கிறார்கள், மருத்துவர்கள் கல்லூரிப் பேராசிரியர்கள் கவிஞர்கள் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

அயல் நாடுகளோடு தொடர்பு எவ்விதம் இருக்கும் என்பதையும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார் அதிபர் நூர் முகமது தராகி.

இரஷ்யா, அமெரிக்கா ஆகிய பெருநாடுகளாக இருந்தாலும் ஈரான். பாகிஸ்தான் உட்பட அண்டைநாடுகளாயிருந்தாலும் அவற்றோடு நல்லுறவு கொள்ள ஆப்கான் ஆர்வத்தோடு உள்ளது. ஆனால் இந்த நாடுகள் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஆப்கானிஸ்தானுக்கு உதவுவதாய் இருக்கவேண்டும் என்று தராகி வரையறுத்துக் கூறுகிறார். தமது கட்சி தவிர மற்றக் கட்சிகள் ஆட்சியின் திட்டங்களுக்கு மாறுபட்டுச் செயல்பட்டால் அக் கட்சிகள் செயல்பட அனுமதிப்பது குறித்துப் பரிசீலனை செய்யப்படும் என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் நடக்குமா? செய்தித் தாள்கள் முழு உரிமையோடு செயல்பட அனுமதிக்கப்படுமா? என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு சரியான சமயத்தில் முடிவு எடுக்கப்படும் என்று கூறியுள்ளார் ஆப்கானிஸ்தான் மக்களின் நலனை மனதிற்கொண்டே முடிவு இருக்கும் என்றும்பதில் கூறினார்.

உங்களுடைய அரசு பொதுவுடைமை அரசா? சீர்திருத்த அரசா என்று செய்தியாளர்கள் திரும்பத்திரும்பக் கேட்டபோது, 'ஜனநாயக மக்கள் அரசு' என்று உறுதியோடு கூறினார்.

செய்தியாளர்கள் பேட்டியின்போது நூர்முகமது தராகி அளித்த பதிலில் நகைச்சுவை நிரம்பி வழிந்ததாம். அதிகசிரமத்துக்கு உள்ளானவர்போல தோற்றமளிக்கவில்லை. தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கலைஞர் செய்தியாளர்களுக்கு அளிக்கின்ற பேட்டியின் போது பளிச்சிடும் நகைச்சுவையையும் அறிவுக் கூர்மையையும் தராகி செய்தியாளர்களுக்கு அளித்திடும் பேட்டி நினைவுப்படுத்துகிறது.

பக்துனிஸ்தான் பிரச்சினை ஓர் அரசியல் பிரச்சினையாகும் பாகிஸ்தானுடன் கலந்து பேசி சுமுகமாகத் தீர்க்கப்படும் என்று தாம் நம்புவதாகவும் தராகி செய்தியாளர்களிடம கூறினார்.

அடிப்படையில் அவர் ஒரு எழுத்தாளர். ஆப்கானிஸ்தானில் உள்ள மக்களின் வாழ்க்கை முறையை அடிப்படையாக வைத்து, பத்து நவீனங்கள் எழுதியிருக்கிறார்.

ஏப்ரல் திங்கள் 27 ஆம் நாள் நடந்த புரட்சி ஒரு சில ராணுவ அதிகாரிகளால் மட்டும் நடத்திய அதிரடிப் புரட்சியல்ல. இது அசல் புரட்சி ஜனநாயக மக்கள் கட்சியும் சேர்ந்து நடத்திய புரட்சியேயாகும்.

ஆப்கானிஸ்தானில் ஜனநாயக மக்கள் கட்சியின் மத்தியக்குழுவே தலைமை அமைப்பாக இருக்கும். கட்சியே நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்கிறது

ஆப்கானின் இன்றைய புதிய அரசு முற்போக்கு அரசு என்று அறிவிக்கப்பட்டுள்ளது நாட்டு மக்கள் நலம் பெற எடுக்கும் நடவடிக்கையை நல்லோர் வரவேற்பார்கள். இந்திய அரசு புதிய ஆட்சியிடம் காட்டும் நல்லுணர்வை நாமும் வரவேற்போம்.

★

அப்பாவி அய்யாசாமி !

ஜனதா கட்சித் தலைவருங்களெல்லாம், அஞ்சு வருசத்திலே வறுமையைப் போக்கிடுவோம்' அஞ்சு வருசத்திலே பத்தாக்குறையைப்போக்கிடுவோம்' அஞ்சுவருசத்திலே வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்கிடுவோம்...' அப்படி இப்படின்னு அளந்து கொட்டினாங்களே — அவங்க போற போக்கப் பார்த்தா இன்னும் அஞ்சு வருசத்துக்கு ஜனதா கட்சின்னு ஒண்ணு இருக்குமாங்க?

விதைத்தது விளைகின்றது!

எதிர்காலம் பற்றிய அச்ச உணர்வை அகை போடுவோரையே அதிகமாகக் கொண்ட இன்றைய சூழ்நிலையில் பிரச்சினை எரிமலைகளின் வெடிப்புக்கள் எந்த வேளையும் எதிர்பார்க்கக் கூடியவையே!

இத்தகு சூழலில்தான்—இப்படிப்பட்ட பிரச்சினைக்குரிய வேளைகளில்தான், ஆள்பவர்களின் தகுதி திறமைகள் தரம் பிரிக்கப்படுகின்றன. அவர்களது அணுகுமுறையின் வடிவம் இதற்குத் துணை நிற்கின்றது.

நிலைமை இப்படியிருக்க, ஆட்சியாளர்களே பிரச்சினைகளை உருவாக்கி விடுபவர்களாக இருந்துவிட்டால் ..... அவர்களே பிரச்சினைகளைப் பெரிது படுத்துபவர்களாக அமைந்துவிட்டால் அதுதான் அவலத்தின் உச்சக்கட்டம்.

அலையின் தழுவுதல் அளவோடு இருக்கும்வரை தான் அழகு—அர்த்தமுள்ளதும்கூட. அதுவே அளவு கடந்து ஆட ஆரம்பித்தால் — சூறாவளிகளின் கருவியாகத் தலைவிரித் தாடத் துணிந்துவிட்டால்... கடலரிப்பு மட்டுமல்ல கணக்கற்ற இழப்பும் நேர்ந்துவிடும்.

அந்த அலை போன்றதே அதிகாரம். அது வரை கடந்தால்—ஆணவப் புயலுக்குக் கருவியாகிவிட்டால், அழிவுகள், அவலங்கள் தவிர்க்க இயலாதவையாகிவிடும்.

அதிகாரம் கையிலிருக்கும் வரை அர்த்தங்கள் கற்பித்துக் கொள்ளலாம். அது கைமாறி விடும்போது கையறு நிலை தான் விடையாக வரும். கலக்கம்தான் முடிவாக அமையும். இன்றைய இந்திரா இதற்கொரு சாட்சி.

இன்றைக்கு ஒரு முன் மாதிரியை உருவாக்கும்போது அதற்கு நியாயபூர்வமான வலிவைச் சேர்த்துவிட்டால் என்றும் தலைநிமிர்ந்து நடக்கலாம்—தரணி போற்ற நடை போடலாம்.

"தங்கள் குறைபாடுகளையும், தாங்கள் படும் வேதனைகளையும் கூறி, அவை ஏற்பட்ட விதத்தையும் ஏற்பட்டதற்கான காரணத்தையும் விளக்கி—அக்குறைபாடுகள் ஒழிக்கப்படவேண்டும்—நீக்கப்பட வேண்டும் என்று அதன் பொருட்டு உழைத்துவரும் முறையைத் தவறென்று—சட்டவிரோதமென்று கருதி—அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்துவிடுவது ஜனநாயக ஆட்சி முறைக்கு முற்றிலும் புறம்பானது" என்றார் அண்ணா.

இன்றைய தமிழகத்து ஆட்சியாளர்கள் இதை வகையாக மறந்துவிட்டனர்.

பிரச்சினைகளுக்குரிய எந்த ஒரு அமைப்பின் இயக்கத்தையும் எடுத்தெறிந்து பேசுவது எள்ளி நகைபுரிவது ஏற்புடைய செயல் அல்ல. சீரழிவுகளைத் தவிர்ப்பதுதான் சிறப்பான செயல்—சீரிய முடிவு.

பதவிக்கு வருபவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதும் புரட்டிட வேண்டிய அரிச்சுவடி இது. 'எல்லாம் தெரிந்த மேதாவிகள் நாங்கள்' என்று விலகி நடந்தால்—நாளை, கலக்கத்தோடு கசப்பை அசை போட்டபடி கால் கொண்டு உதைத்ததையே கையில் எடுத்துப் படிக்க வேண்டிவரும்.

இந்த வகையில் ஆனைகளே அடிசறுக்கி அனுபவம் பெற்றிருக்கின்றன.

இந்திப் பிரச்சினையில் இந்த மண்ணை ஆண்ட அதிகார வர்க்கம் காட்டிய பிடிவாதப் போக்கு, பின் நாளில் ஆட்சி மாற்றத்திற்கே இட்டு வந்தது.

அவசர நிலைக்கால அம்மையாரின் போக்கு இந்த மண்ணில் இன்னொரு விடுதலைப் போர் நடக்க வேண்டிய அளவுக்கு நிலைமையை உருவாக்கியது.

இன்றைய தமிழகத்து ஆட்சியாளர்கள் இந்த அரிச்சுவடியை ஆவேசத்தோடு மறுத்துவிட்டு நடைபோடுவதாகவே அவர்களது அசைவுகள் அடையாளம் காட்டுகின்றன.

'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்ற ஒவ்வாத போக்கே அவர்கள் எல்லாப் பிரச்சினைக்கும் ஏந்தும் 'ஆயுதம்!'

ஆசிரியர்கள் பேரணி முதல் அரசு ஊழியர் போர் வரை ...... ஆட்சியாளர்களின் அரை வேக்காட்டுத்தனம் அம்பலத்திற்கு வந்தாகிவிட்டது.

இந்த வகையில் விவசாயிகள் போராட்டமும் வீதிக்கு வந்துவிட்டது. இன்று நியாயம் கேட்டு அவர்கள் நடுவீதியில் நிற்கின்றார்கள்.

வீதிக்கு வந்துவிட்ட பிறகும் விபரத்தோடு அணுகத் தெரியவில்லை ஆட்சியாளர்களால். அர்த்தமற்ற சாடல்களும், அவசரப்போக்கும்—இன்னும் அவர்களை ஆட்டுவிக்கின்றன.

அவர்களது கோரிக்கைகள்—அவை தரம் பிரித்து வகைப்படுத்த வேண்டியவையாக இருக்கலாம். அதற்காக அவர்களது குரல்வளைகள் நெறிக்கப்பட வேண்டியவை, குரல்கள் ஒடுக்கப்பட வேண்டியவை என்பது ஏற்கக்கூடாத வாதம்.

கூடிப் பேச வேண்டிய ஒன்றைக் கடும் அடக்குமுறை மூலம் அடக்கிவிட நினைப்பது அர்த்தமற்ற போக்கு — அக்கிரமமானதும்கூட.

கருத்துப் பரிமாறல் மூலம் தீர்க்க வேண்டிய ஒன்றை குண்டாந்தடி கொண்டு, குண்டுப் பரிசளிப்பு மூலம் தீர்த்துவிட நினைப்பது விவேகமாகாது.

இது நாகரிக அரசியல்—நாடாள்வோருக்கும் அழகல்ல.

எல்லையிலே நிற்க வேண்டிய இராணுவம் ஏழை எளிய மக்களை அச்சுறுத்தப் பயன்படுத்தப்படுகின்றது என்றால்—என்ன பொருள்?

திருவிழாக் கூட்டத்தில்—சந்தைத் திடலில், கூடியுள்ள மக்களைக் குறுகுறுக்க வைக்கவா, பார்த்துப் பதைபதைத்துப் புழுங்கவா......வாக்களித்தார்கள் பாமர மக்கள்.

அவர்களது நிம்மதி நிலைகுலையலாமா...இதுநியாயமா? கூடிப் பேசியிருந்தால்—கூட்டி

-அருணா சண்முகம்-

உட்காரவைத்துக் கேட்டிருந்தால் எத்தனை அவலங்களைத் தடுத்திருக்க முடியும் எத்தனை உயிர்கள் பறிபோகாமல் பாதுகாத்திருக்க இயலும்.

எத்தனை குடும்பங்கள், இந்த அரசின் அணுகுமுறை மாறுபாட்டால் — அடக்குமுறைக் கட்டவிழ்ப்பால் கையறு நிலையில் கலங்கி நிற்கின்றன. ஏனிந்த அவலம்?

தங்களது கோரிக்கைகளின் பக்கம் அரசின் கவனம் திரும்ப வேண்டும் என்பதற்காக அவர்கள் போராடுவது எந்த வகையில் தவறான செயல்?

நமது முதல்வருக்கு அனுபவமில்லை என்பதற்காக அவர்கள் அறப்போர்களில் ஈடுபடுவது எப்படித் தவறாகும்?

'பாலங்கள் தகர்ந்தன—பஸ்கள் எரிந்தன' என்று அர்த்தம் கற்பிப்பது கூடாத போக்கு. இதை வைத்துக்கொண்டு திசை திருப்ப முற்படுவது ஏற்க முடியாத வாதம்.

வன்முறைகள் தண்டிக்கப்பட வேண்டியவைதான். அதற்காக அறியா மக்களையும் சேர்த்துத் தண்டிப்பது அறிவுடைய செயலல்ல.

★ கூலிக்கு ஆள் பிடித்துப் போராட்டம் நடக்கிறது.

★★ 'மது' விளையாடுகிறது ....என்ற கருத்தில் பெரிய இடத்தில் இருப்பவர்கள் பேச முற்பட்டனர்.

இதுவா பிரச்சினைக்குத் தீர்வு! இதுவா குமுறும் உள்ளத்தைக் குளிர்விக்கும் போக்கு!

சட்டத்தைக் கையில் வைத்திருப்பவர்களே 'மது' பற்றிப் பேசினால்......ஆள்வதற்குரிய தகுதியை என்னவென்று எடை போடுவது.

இவை எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பு வைப்பதுபோல் இன்னொரு வாதம்—'கலைஞர் தூண்டுகிறார்' என்று.

என்ன-இன்னொரு வழக்கு ஜோடனைக்கு முன் ஏற்பாடா?

என்னென்ன பிரிவுகள் இந்த முறை!!

எதையும் தாங்கிக்கொள்ளக் கலைஞர் தயார்தான். ஆனால் காலத்தின் தீர்ப்பு பற்றிய கவலை இன்னும் இன்றைய ஆட்சியாளர்களுக்கு வரவில்லை என்று தெரிகின்றது.

ஒரு காலத்திலே ராணுவத்தைச் சந்திப்பேன் என்றவர் இன்று ராணுவத்தை அழைக்க வேண்டி வந்துள்ளதே அதுதான் காலத்தின் தீர்ப்பு.

ஒரு காலத்திலே மொரார்ஜி பற்றி வேண்டாதது கூறி வேடிக்கை காட்டியவர் இன்று 'நடிக்க அனுமதி கேட்டு' விண்ணப்பிக்க வேண்டி வந்துள்ளதே அதுதான் காலத்தின் தீர்ப்பு.

ஒரு காலத்திலே ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் என்று ஊரையே கலக்கியவர் இன்று கலங்க வேண்டி வந்துள்ளதே அதுதான் காலத்தின் தீர்ப்பு!

விதைத்தது விளைகின்றது—வேறொன்றுமில்லை!

அறுப்பதற்கு அருவருக்கிறார்கள் அவ்வளவே!!

இதை மறைக்கத்தான்—இதற்குத் திரை போடத்தான் கலைஞரை...கழகத்தைக் காய்கின்றனர் ஆள்பவர்கள்.

அதற்காகக் கழகத்தின் குரல் ஓய்ந்துவிடாது. மக்களாட்சி முறையின் மரியாதை குலைக்கப்படும் இடங்களிலெல்லாம் கழகத்தின் உரத்த குரல் ஒலித்துத்தான் தீரும். அதை வெல்ல ஒரு சக்தி இல்லை! அதைவிட வேறொரு வலிய சக்தி இல்லை!!

வாழ்க கலைஞர்!

வளர்க கழகம்!!

'நம்மவர் அல்லாதவர்'

கடந்த காலத்தில் ஏடுகள் எல்லாம் எவ்வாறு இருந்தன என்றால் அண்ணாதுரையும்கூடப்பேசினார்; ஈ. வெ. ராமசாமி நாயக்கர் கூடப் பேசினார் என்கிற அளவிற்கு செய்திகள் வெளியிடப்பட்ட நிலையில் இருந்தன. அந்தக் காலத்திலிருந்து நாம் வளர்ந்து இன்றைக்குப் பல நாளேடுகளில் நம்மைப்பற்றிய செய்திபோடாவிட்டால் பத்திரிகையில் வரும் செய்தி குறைவானதாக இருந்தாலும் கடையில் தொங்கவிடப்படும் சுவரொட்டிகளின் பெரிய தலைப்பில் செய்திகளைப் போட்டால்தான், அது நல்லதோ கெட்டதோ செய்தி எந்தவிதமானதாக இருந்தாலும் அந்தப் பத்திரிகையை வாங்கிப் படிக்கும் ஆர்வம் மக்களுக்கு ஏற்படும் என்கிற அளவிற்கு பத்திரிக்கைகாரர்கள் வந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் சில பெரிய ஏடுகள் இன்றைக்கும் மிகக் குறுகிய நோக்கத்தோடு நடந்து வருகிற அவலத்தை நான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் இருக்கின்ற நேரத்தில் அவர்கள் கவனத்திற்காகச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. அன்னை மணியம்மையார் மறைந்தார். அவரது மறைவுச் செய்தியை தமிழ் நாட்டில் பல ஏடுகள் பெரிய அளவில் வெளியிட்டு மணியம்மையார் மறைவுக்காகப் பல தலைவர்கள் விடுத்த இரங்கல் செய்திகளை வெளியிட்டு தங்களுடைய பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்றி இருக்கின்றன.

ஆனால் நீண்டகாலமாக நடைபெறும் ஒரு ஆங்கில ஏடு "மறைந்தவர் பட்டியல்" என்று போடப்படும் ஒரு காலம் செய்தியில் இரண்டுபேர் இறந்த செய்தியை முதலில் போட்டுவிட்டு மூன்றாவதாக மணியம்மையார் மறைவுச் செய்தியைப் போட்டதை நாம் ஏதோ விளையாட்டாக எண்ணிப் பார்த்திடக்கூடாது. அதிலே எவ்வளவு ஆழமான பொருள் இருக்கிறது என்பதை இந்த மேடையில் வீற்றிருக்கிற அனைத்துக்கட்சி நண்பர்களும் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும்.

அன்னை மணியம்மையார் மறைவு அந்த ஆங்கிலப் பத்திரிகையில் மறைந்தவர் பட்டியலில் வரக்கூடிய ஒரு செய்திதானா? என்பதை எண்ணிப் பார்த்தால் நம்மவர் அல்லாதவர் என்று சூசகமான வார்த்தைகளைப் பேராசிரியர் பயன்படுத்தினாரே, அதற்கு உண்மையான பொருளை நீங்கள் புரிந்து கொள்ளமுடியும்.

—மதுரை 'தினகரன்' நாளேடு வாழ்த்துரை விழாவில்
தலைவர் கலைஞர்

புயல்-வெள்ளத் துயர்துடைப்பு நிதி!

30—4—'78 தேதிய இதழ் தொடர்ச்சி ... 63,505—94

முகவை ஓட்டல் வசந்தா தொழிலாளர்கள் கா்ளை பா்ண்டியன், கனகராசு, ரா. சந்திரன், கோ. தங்கத்தேவர், முத்துச்சாமி ஆகிய 5 பேர் ரூ. 3/- வீதம் ... 15—00

முகவை மலைச்சாமி, வீரபத்திரன், குருசா்மி ஆகிய 3 பேர் ரூ. 2/- வீதம் ... 6—00

மதுரை-7, சு. பரமசிவம், சென்னை-50, எம். எஸ். காதர் மொய்தீன், காஞ்சி சு. கோதண்டராமன், கா்ரைக்குடி ஏ. ஆர். மெய்யப்பன் ஆகிய 4 பேர் ரூ 21/- வீதம் ... 84—00

ஈரோடு ஏ. முகமது முபாரக், திருச்சி திருமதி சு. கிருஷ்ணவேணி சுந்தரராசன், சென்னை சிந்தாதிரிப்பேட்டை வி. கருப்பன், திருவரங்கம் சி. ஆறுமுகம், மதுரை-6 மு. பெரியகருப்பன், சென்னை காலிகிராமம் வி. ரவீந்திரன், டி. பாலன், தஞ்சை இரா்மலிங்கபுரம் வி. சின்னதம்பி ஆகிய 8 பேர் ரூ. 20/- வீதம் ... 160..00

மதுரை கொடைக்கானல் கே. வி. திருமால்சாமி, இரா. அறிவழகன், கே. கரியமால், மணி ஆகிய 4 பேர் ரூ. 5/- வீதம் ... 20—00

சென்னை கிண்டி இல்ல மாணவர்கள் சார்பில் ... 20—00

பல்லடம் எஸ். துரைராசு ... 16—00

சென்னை சூளைமேடு எம். பி. தேவராசு, திருச்சி சி. பி. சந்திரன், கே. பி. நடராசன், புத்தூர்-12 கே. செல்வம், சென்னை-1 ஏ. கே. சர்மா, திருவல்லிக்கேணி சி முனுசாமி, ஏழுகிணறு என். குப்புசாமி, எல். பலராமன், சேலம்-4 ஆர். வி. ஜி ராஜ் கோபால், வ. ஆ. கணியம்பா்டி கே. எம். ஜெயராமன், மதுரை வி. மூக்கையா, எம். வேல்பாண்டியன், பெங்களூர்-2 சி. பாலசுந்தரம், மேட்டூர் டேம் பி. நித்தியானந்தம், திருச்சி-8 த. சாமியாப் பிள்ளை, சிதம்பரம் எஸ் கண்ணன் ஆகிய 17 பேர் ரூ 15/- வீதம் ... 255—00

பல்லடம் கே. எஸ். தண்டபாணி, எஸ். நடராசன் ஆகிய 2 பேர் ரூ 13/- வீதம் ... 26—00

மதுரை இ. தங்கவேல் ... 12—00

சென்னை-21 ஆர். என். பாண்டியன் (11—11), நெல்லை பெத்தநாய்க்கன்பட்டி எஸ். காதர் கனி. திருச்சி இரா. சீனிவா்சன், சென்னை ஒரகடம் ஆ. இரா. நாதன். தூத்துக்குடி சி, நடராசன், திருச்சி புத்தூர் வி. இராமநாதன், சென்னை மொகப்பேர் எம். சீனிவாசன். தண்டையார்பேட்டை கே. முருகன்—எஸ் எஸ். மணி. சிதம்பரம் பிரகாஷ் சந்த் கோரா, மதுரை எம். காசி, படப்பை நூர் அலி, சென்னை-17 மா. பெருமாள், சென்னை-3 எம். ஏ. மாலிக், பம்பாய் பென்ஸ்டென், சென்னை நா. நா. தோட்டம் மு. ராமையா, தேனீ வி. கிருஷ்ணசாமி, நெல்லை க. தி. அரசு, பல்லடம் எம். என். பழனிசாமி, மதுரை-1 வி. கார்மேகம், எஸ். வி. என். மஸ்தான், சென்னை இராதாகிருஷ்ணன் நகர் எம். சக்கரபாண்டியன், மதுரை-1 ஆர். கருப்பையா ஆகிய 22 பேர் ரூ. 11/- வீதம் ... 242—11

மதுரை க. புதுப்பட்டி பி. அப்துல்ரகீம், முகவை காத்தூர் கோ. சொக்கலிங்கம் பொள்ளாச்சி எஸ். இராமசாமி, மதுரை இராமச்சந்திரன், குமரி வி. ஜனார்த்தனம், சென்னை-2 என். திருநாவுக்கரசு, பம்பாய் சுபாஷ் பேடி ஷராப், பம்பாய்-71 ஜே. டேவிட், தஞ்சை புதூர் இரா. சுப்பையன், இராசபாளையம் மு வ. சண்முகசுந்தரம், சேலம் அம்மாபேட்டை ஏ. எம். மாணிக்கம், சிதம்பரம் கே. இந்திராணி, சென்னை.17 அரக்கண்ணன் ஆகிய 13 பேர் ரூ. 11 வீதம் ... 143—00

மேட்டூர் அபிபுல்லா (10—25), வண்ணை வாழ்வழியழகன் (10—10), பெங்களூர் கே. இராசேந்திரன், தர்மபுரி காவேரிப்பட்டினம் ஜி. ரங்கசாமி, வி. சி, பூங்காவனம், மதுரை எஸ். ஜனார்த்தனம், எடப்பாடி பா. பாப்பி மேட்டூர் அணை பி. பெருமாள், முகவை ஆத்தங்குடி எம். சி. சுப்பையா, அவிநாசி சவுந்தர்ராஜ், பா. இராசேந்திரன், பி. குப்புராஜ் தூத்துக்குடி வி. குமார் ஆகிய 13 பேர் ரூ. 10 வீதம் ... 130—00

பெங்களூர் பி, பெரியசாமி, சென்னை-45 எம். வைரவன், சென்னை-61 எஸ். ஐம்புலிங்கம், சென்னை இ. கிட்டு, பெருமாள், முத்துராமன், வ. ஆ. ஏ. அகமது பாட்சா, திருவண்ணாமலை எஸ். கே. அருண், தர்மபுரி வரட்டனப்பள்ளி வெங்கட்டப்பன். பி. வி. எல்லப்பன், உப்பாரப்பட்டி வி. வேடியப்பன், எஸ். சின்னதம்பி, பெங்களூர் எம். ஆர். பழனி, இராசிபுரம் ஏ. சீனிவாசன், ஈரோடு-2 எம். துரைசாமி, உளுந்தூர்பேட்டை எஸ். ஜெகநாதன், இடைப்பாடி ஏ. சின்னப்பன், கோவை காந்திபுரம் ஆர். சண்முகம், சேலம் ஏ. விஜயகுமார், என். இராமசாமி, தம்மம்பட்டி எம். பெரியசாமி, தர்மபுரி இராசாபேட்டை பாவலர் கருமலைத் தமிழாழன், நாகர்கோவில் தா. கு. சண்முகம், வ. ஆ. வடக்குப்பட்டு என். பாலகிருட்டிணன், மதுரை வி. திருஞானம், எஸ். காசிநாதன், எஸ். தர்மராஜ். கீழ்விசாரம் ஆர். பாலசுந்தரம், பெரியநாயக்கன்பாளையம் அ. தம்பிதுரை, கோவை தேவராயபுரம் ம. கருப்ப கவுண்டர், மேல்விசாரம் எஸ். எம். இஸ்மாயில் மதுரை எம். எஸ் பாப்சான், எம். கிருட்டிணன், இ. விசயன், எஸ். சங்கரைய்யா ஆகிய 35 பேர் ரூ. 10 வீதம் ... 350—00

கோவை-1 பி. செல்லையா, மதுரை-5 சீனு. இராமசாமி, ஆ. இராமன், மண்டபம் ஏ. எச். சுல்தான் பெ. நாகமுத்து, நொச்சியூரணி மு. தசரதன். ஏ. இரகுமான், எம். ஏ. காதர், மதுரை-14 வே. போஸ், மதுரை-2 எல். பா்லசுப்பிரமணியன், ஆத்தூர் ஏ பி. ஆறுமுகம், விருதுநகர் ஆர். மனோகரன், பா்பனாசம் கலைஞர் மின் அச்சகம் எஸ். ஆ. இராசு, மதுரை நாகல்நகர் எம். முத்தையா ஆகிய 15 பேர் ரூ. 10 வீதம்... 150—00

சென்னை பெரியார் நகர் எம். பாலசுப்பிரமணியம், பெரியகுளம் எம். சண்முகம், சென்னை-7 ஜி. ருக்மணி அம்மாள், சேலம்-1 கே. கே. நன்னுசாமி, பெரம்பூர் டி. ஆர். வில்லா்ளன், செங்கை டி. எஸ். நடராசன், வி. பி. முத்து, எம். வி. தேவரா்சன், சென்னை-1 முரளி, ஆர். பாண்டுரங்கம, சேலம் அம்மாபேட்டை மாதேஸ்வரன், வடிவேல், சிதம்பரம் சி. இரா. கோவிந்தராசன், ப. மா. முத்து, திண்டுக்கல் எஸ். வி. இராமகிருஷ்ணன், தூத்துக்குடி வி. வன்னியர் ஆகிய 16 பேர் ரூ. 10 வீதம் ... 160—00

தூத்துக்குடி என். வெள்ளைச்சாமி, விழுப்புரம் வி. பாண்டுரங்கன், ஆந்திரா எஸ். நாகலிங்கம், நாகர்கோவில் ஆர். மாணிக்கவாசகன், நால்கநகர் ராசு மற்றும் நண்பர்கள், நெல்லை ஏ. பொன். பெருமாள், திருச்சி வி. சுப்பிரமணியம், கரூர் ஆர். முத்துசாமி, கோவை ஆர். கோவிந்தராசன், சிதம்பரம் கண்ணன், திம்மம்பட்டி எஸ் அப்துல் சிக்கர், முகவை, தேரினவேலி எஸ். கே. ஆறுமுகம், பம்பாய் காமராசர் நகர் பீ. சேவியர், ஆர். மணி, வாணியம்பாடி கே. சம்பந்தம், திருக்கோவிலூர் ஆப்பிரகாம், கோவிந்தசாமி, தர்மபுரி அனுமந்தீர்த்தம் பி. எஸ் அனீபா, சோளிங்கர் டி. லோகநாதன், திருவேலங்காடு கே. சீனிவாசன், காஞ்சி எம்: முனுசாமி ஆகிய 20 பேர் ரூ. 10 வீதம் ... 200—00

செங்கை தேசுமுகிபேட்டை எம். செழியன், திருச்சி கே. தனபால், மு. மாணிக்கம், ந. செயபிரகாசம், வ. ஆ. தோட்டப்பாளையம் வி. முனிரத்தினம், மங்கலப்பள்ளி எம். கே. எஸ் மணி, பெங்களூர் பெரியார் நகர் எம், இராசு, திருவண்ணாமலை எஸ். வெங்கட்ராமன், புதுக்கோட்டை ஆர். இராசாராம், பம்பாய் லட்சுமி டிரேடர்ஸ், செம்பூர் அப்துல் கரீம், பம்பாய்-78 ஜி. ஜார்ஜ், தர்மபுரி பி. வி. திம்மராயன் ஆகிய 13 பேர் ரூ 10/- வீதம் ... 130—00

பம்பாய் ஜோகிஸ்வரி கிளை சார்பில் ... 10—00

கோவை கருங்கல்பாளையம் பொன். செந்தில்நாயகம், பொன்னேரி டி. சி வெங்கடன், சிதம்பரம் செ. முருகப்பன் திருச்சி-8 மு. நடராசன், அரு. சோமசுந்தரம், வெ. திருவேங்கடம், கும்பகோணம் பி. ரங்கராசன், தஞ்சை மங்கநல்லூர் முருகையன், திருச்சி பீமநகர் சி. துரைராசன். அரியமங்கலம் க. பழனியாண்டி, திருச்சி-9 கே. நடராசன், கும்பகோணம் த. பாலன், புதுகை கோட்டைப்பட்டினம் அமீர் முகைதீன், தஞ்சை இடையூர் ஞானசுந்தரி, நெடுகுப்பம் கோ. கல்யாணசுந்தரம், பாப்பம்பட்டி கிளை, முகவை காட்டு தலைவாசல் என். சாகுல்அமீது, கே. கணேசன், கோவை பில்லூர்டேம் இரா. வனராசன், சென்னை-26 இரா. சி. சின்னதுரை, வேலூர் வி. நடராசன், மதுரை எம். தங்கராசு, சென்னை-15 கே. ஏழுமலை, பெரம்பலூர் இரா. சுப்பிரமணியம், திருப்பத்தூர் எம். சி. மாணிக்கம், கரூர் எம். கண்ணன், தஞ்சை-2 பால. கோவிந்தராசன், நெய்வேலி-1 அந்தோணி, கீழ்குமாரமங்கலம் கோ. வேணு, வ. கோதண்டபாணி, பெங்களூர் எஸ். வரதராசன், ஏ. இராமலிங்கம், ஆர், கிருட்டிணமூர்த்தி, ஏ. எஸ். இராமன், அமைந்தகரை பொன்முடி, கே. வி. பழனிசாமி ஆகிய 36 பேர் ரூ. 10 வீதம் ... 360—00

சென்னை-29 கே. எம். பி. பாலம்மாள், சேலம்-2 குருநாதன், மதுரை இராகிங்கபுரம் முத்து மனோகரன், சேலம்-2 ஏ. நடராசன், சித்தையன். மதுரை உத்தமபாளையம் கே. என். அனீபா—நாகூர் சாயபு, ஏ. இராமச்சந்திரன், தேனீ ஏ. கே. மூர்த்தி, அய்யலூர் எஸ். பி. மாறன், எஸ். மாரியப்பன், மேட்டுப்பட்டி ஏ. எம். சி. நாச்சியப்பன், மன்னார்குடி இரா. கணேசன், பெங்களூர்-8 பெருமாள், பெங்களூர்-33 எஸ். சான் ஜோசப் ஆகிய 14 பேர் ரூ. 10 வீதம் ... 140—00

ஆக மொத்தம் ரூ. 66,135—06

வந்த மடல்

அன்புள்ள ஆசிரியருக்கு,

தமிழர்தம் வாழ்க்கையின் மேம்பாடு, பண்பாடு. தமிழர் கலை, கலாச்சாரம், இலக்கியம், நாகரிகம்—ஆகியன குறித்து முழங்கும் ஒரு நல்ல ஏடு இல்லாத குறையை 'நம்நாடு' இதழ் நீக்கி வருகிறது.

கழகத்தில் பூத்த மலராம் தலைவர் கலைஞரின் தமிழ் நடை வர்ணனைகள், யாவரையும் படிக்கத் தூண்டும் எளிய சொற்கள், மாற்றுரும் உணர்ந்து திருந்திக் கொள்ளக்கூடிய கருத்துக் குவியல்கள்— 'நம்நாடு' இதழில் நிறைந்து முழுமதியென ஒளி வீசுகின்றன.

சாதி வேறுபாடுகள், ஏற்ற தாழ்வுகள், ஆகியவைகளைச் சாடி—கவர்ச்சிக் கொள்கையின் இருட் போர்வையினைக் கிழித்தெறிந்து ஒரு புதிய மறுமலர்ச்சி பெற்ற—ஒளிமிக்க தமிழகத்தை அமைக்கத்துடித்து நிற்கும் கலைஞரின் இலட்சிய வேட்கை ஆங்காங்கே மின்னுகின்றன,

"உடன்பிறப்பே" என்று கலைஞர் அன்போடு அழைக்கும் போது எட்டுத் திக்கிலும் வாழும் தமிழரின் உள்ளமும் அடையும் மகிழ்வுக்கு அளவேது?

இலங்கையில் 'நம் நாடு' இதழ் ஒன்று, ஒரு ரூபாய்க்கு விற்றபோதிலும் அனைவரும். விரும்பி வாங்குகின்றனர் என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு ரூபாய் என்ன, ஐந்து ரூபாய் என்ன, ஐம்பது ரூபாயாக இருந்தாலும் — 'அண்ணாவின் தம்பியாம் கலைஞரின் கருத்தை ஈர்க்கும் படைப்புகளுக்கு ஒரு விலை உண்டோ?

அன்புள்ள தம்பி,
ஆ. இரா இராசமாணிக்கம்
கலைஞர் கருணாநிதி
பொதுப்பணி மன்றம்,
நுவரெலியா,
இலங்கை.

★ ★ ★

ஐயா,

இப்பவும் 'நம்நாடு' வார இதழில் பல அம்சங்கள் மிகவும் சுவையாக உள்ளன. இன்னும் பல சுவையான அம்சங்கள் வெளிவரவேண்டும் என என் போன்ற வாசகர்கள் விரும்புகிறோம். 'நம்நாடு இதழில் தலைமைக் கழகத்தின் அறிவிப்புகள் தவறாது வெளிவரவேண்டும், பேரறிஞர் அண்ணா, அவர்களின் பழைய கருத்தோவியங்களைத் தொடர்ந்து வெளியிட்டால் இன்றைய இளைய தலைமுறையினர் படித்து பயன்பெற வசதியாக இருக்கும். அதுபோல் டாக்டர் கலைஞர் அவர்களின் பழைய, அரசியல் கட்டுரைகளையும் வெளியிடவேண்டுகிறேன்.

'நம் நாடு' இதழில் கழகத்தின் நடவடிக்கைகளின் தொகுப்பு வாரம் தோறும் வெளிவந்தால் கழகத் தோழர்கள். படித்து, பிரச்சாரம் செய்ய வாய்ப்பாக அமையும். அரசின் நடவடிக்கைகளை, தலையங்கம் மூலம் கண்டிக்கவேண்டும். இதுபோன்ற பகுதிகள் விரைவில் வெளிவரும் என நம்புவதோடு, கலைஞரின் தொடரோவியம் வெளிவரும் நாளை எதிர்பார்க்கிறோம்.

வளர்க. நம்நாடு!

தோழன்,
கோ. மா. குப்புசாமி
கருவலூர்.

“உன்னை நான் விடமாட்டேன்”

மனிதன்: எனக்கென்னவோ நாலரை கோடி மக்களுக்கு நல்வாழ்வு தரும் முதலமைச்சர் தொழிலைவிட நடிப்புத் தொழில் தான் பிடித்திருக்கிறது!

மனம்: ஏன்?

மனிதன்: அது மக்களுக்குக் களிப்பூட்டும் தொழில்; என் வாழ்வுக்கும் இதமளிக்கிறது.

மனம்: களிப்பூட்டுவதா முக்கியம்?

மனிதன்: அதுதானே வாழ்வின் நோக்கம் ‘சிரித்து வாழ வேண்டும்’ என்பதுதான் என் வாழ்வின் தத்துவம்!

மனம்: வயிறு கிள்ளும்போது?

மனிதன்: வயிறு கிள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது. வயிற்றுக்கு உடையவன் பொறுப்பு!

மனம்: ஆட்சியாளர்க்குப் பொறுப்பில்லையா?

மனிதன்: அதை அதிகாரிகள் பார்த்துக்கொள்வார்கள்!

மனம்: அப்படியானால் தேர்தல் எதற்கு?

மனிதன்: அதுதான் எனக்கும் புரியவில்லை! அதனால்தான் என் கட்சிப் பொறுப்புக்களுக்கு நான் தேர்தலே வைப்பதில்லை!

மனம்: அப்படியென்றால் முதலமைச்சர் பதவியை விட்டுத் தொலைக்க வேண்டியதுதானே?

மனிதன்: அதுவும் முடியாது!

மனம்: ஏன்?

மனிதன்: அந்தப் பதவியிலும் ஒரு சுகம் இருக்கத்தான் செய்கிறது!

மனம்: உன் சுகத்துக்காகத்தான் எல்லாம் நடக்க வேண்டுமா?

மனிதன்: ‘எல்லாம் எனக்காக” என்பதே இன்றைய உலகில் மனித இயல்பு!

மனம்: தம் சுகத்தை இழந்து பிறர் நலனுக்கு உழைப்பவர்களும் நம்மிடையே இருக்கிறார்களே?

மனிதன்: அவர்கள் வாழத் தெரியாத பைத்தியக்காரர்கள்!

மனம்: அப்படியா?

மனிதன்: ஆமாம்; அவ்வாறு உழைப்பவன் என்ன சுகம் கண்டான்?

மனம்: இயன்ற அளவு மக்களை வாழ்வித்து அதனால் பெறும் மன மகிழ்ச்சி அவனுக்கும் உண்டே?

மனிதன்: உடம்பின் சுகத்தைப் பற்றி அவனுக்கு என்ன தெரியும்? நான் போட்டிருக்கும் பளபளக்கும் சட்டையைப் பார்! உடுத்தியுள்ள வேட்டியைப் பார்! அணிந்திருக்கும் கடிகாரத்தை — குல்லாயைப் பார்! உல்ல சப் பவனி வரும் எனது குளுகுளு ஊர்தியைப் பார்! நான் குடியிருக்கும் வீடு — உண்ணும் உணவு இவைகளின் பெருமை பேச இப்போது நேரமில்லை: படுத்திருக்கும் பட்டுமெத்தையை தலைக்கு வைக்கும் தலையணையை அல்லது வாழைத்தண்டனைய ஆரணங்குகளின்......! சரி விடு! அதுவல்லவா சுகம்?

மனம்: உன்னிடம் உரையாடும் நான் யாரென்று தெரிகிறதா?

மனிதன்: தெரியவில்லையே!

மனம்: உன் மனசாட்சி!

மனிதன்: உன்னைத்தான் அடக்கிவிட்டேனே?

மனம்: கொன்று விட்டேன் என்று சொல்.

மனிதன்: அப்படித்தான் வைத்துக் கொள்!

மனம்: மனித உள்ளத்தின் மென்மை உணர்வுகளே உனக்குக் கிடையாதா?

மனிதன்: அதை நான் ஒத்துக் கொள்வதில்லை!

மனம்: ஏன்?

மனிதன்: எனக்கு சரிபட்டு வரவில்லை.

மனம்: சேற்றில் சுகங்காணும் பன்றியைப் பார்த்திருக்கிறாயா?

மனிதன்: எல்லோரும் பார்த்திருப்பார்கள்!

மனம்: அதற்கும் உனக்கும் என்ன வேறுபாடு?

மனிதன்: எதற்கு வேறுபாடு இருக்க வேண்டும்? பன்றி சுகம் பன்றிக்கு! என் சுகம் எனக்கு!

மனம்: அடப்பாவி

மனிதன்: அப்படித் திட்டுவது வாழத் தெரியாதவனின் கோழைக் கூப்பாடு!

மனம்: மரம்கூட நிழல் தருகிறதே?

மனிதன்: அதற்குத் தேவையில்லாத நிழலில் மற்றவர்கள் ஒதுங்கிக் கொள்கிறார்கள்!

மனம்: எப்படியும் வாழலாம் என்பது உன் தத்துவமா?

மனிதன்: நான் எதற்கும் துணிந்தவன்!

மனம்: பிறரை வாழ்விக்கும் உயரிய மனித உணர்வுகள் தாம் சமுதாயத்தை மேம்படுத்த வல்லன என்பதை நீ ஒப்பமாட்டாயா?

மனிதன்: எனக்குத் தேவையில்லை!

மனம்: அப்படிப்பட்ட பண்பாளர் இருக்கவேண்டிய இடத்தில் நீ இருக்கிறாயே?

மனிதன் - நான் ஆயிரத்தில் ஒருவன்!

மனம்: மக்கள் சமுதாயத்தையே உன் ஒருவன் சுகத்துக்குப் பலிகிடாய் ஆக்கலாமா?

மனிதன்: நான் ஒரு வேட்டைக்காரன்!

மனம்: மக்களை வாழ்விக்கப் போவதாகச் சொன்னாயே?

மனிதன்: இப்போதும் தான் சொல்கிறேன்! அது தேர்தல் களத்திற்குத் தேவையான தத்துவம்! மற்றவர் ஏமாந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல

மனம்: மற்றவரை ‘ஏமாற்றாதே என்பாயே?

மனிதன்: ஏமாறாதே’ என்றும் எச்சரித்திருக்கிறேன்! அவர்கள் கேட்கவில்லை! அதனால் எனக்குக் கிடைத்த ஏற்றத்தை நான் ஏன் ‘இழக்க வேண்டும்?

மனம்: உன் வாழ்வே நடிப்புத் தானா?

மனிதன்: நாடகமே உலகம்! அதில் எனக்குக் கொடுக்கப்பட்ட வேடத்தில் நான் நடிக்கிறேன்!

மனம்: உன் நடிப்பு போலியானது!

மனிதன்: போலியையும் அசலைப் போலச் செய்து காட்ட முடிந்தால், போலி அசல் என்ற பாகுபாட்டுக்கு இடமேது? அந்தத் திறமை எனக்கு உண்டு!

மனம்: எவ்வளவு காலத்திற்கு இந்த நடிப்பு?

மனிதன்; மக்கள் மன்றத்திலே எடுபடும் வரை!

மனம்: இது பித்தலாட்டம் அல்லவா?

மனிதன் - பித்தலாட்டம் என்பதே வாழ்வுப் போராட்டத்தில் தோற்றவன் வென்றவனைத் திட்டுவதற்குப் பயன்படுத்தும் ஒரு எரிச்சல் வார்த்தை!

மனம் கொடுத்த வேடத்தையாவது செம்மையாகச் செய்ய வேண்டா?

மனிதன்; — எடுபடும் வரை எப்படிச் செய்தாலும் அது செம்மையுடையது என்றுதான் உலகம் கருதும்!

மனம்: என்றாவது இந்த வேடம் கலைபலாம் அல்லவா?

மனிதன்; அது தான் நடக்காது! சாகும் வரை இந்த வேடத்தை தானே தாங்கப் போகிறேன்!

மனம்: எப்படி முடியும்?

மனிதன்: எனக்குப் போட்டியாக இந்த வேடத்தைப் புனைய எவர் முன் வந்தாலும் அவரை ஒளித்துக் கட்ட என்னால் முடியும் பிறகு என்னை விட்டால் வேறு ஆள் இல்லை என்றநிலையில் மக்கள் என்னை விடவும் மாட்டார்கள். அந்த மக்களின் மன மயக்கம் என்றைக்கும் தெளியாமலிருக்க வேண்டும் என்பதற்குத்தான் மீண்டும் படவுலகையும் பற்றி உள்ளேன்.

மனம்: படவுலகை நீ தாவிப் பிடித்திருப்பதைப் பார்த்தால், கொஞ்ச காலம் பிரிவைக்கூட உன்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்பது தெளிவாய் புரிகிறது! உன்னை நான் விடமாட்டேன் என்ற தலைப்பே உனக்குள்ள தவிப்பையும், ஏக்கத்தையும், படவுலகத்தின்மீது நீ கொண்டிருக்கும் தணியாக் காதலையும் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறதே!

மனிதன் - என் அந்தரங்க உணர்வுகளை நீயே அம்பலப்படுத்தி விடுவாய் போலிருக்கிறதே!

மனம்: நீ உன் விசிறிகளுக்கு வாத்தியாராக இருக்கலாம்! ஆனால் நான் உனக்குச் சட்டாம் பிள்ளை! நான் என்றும் உன்னுடன் இருப்பேன்; உன்னைக் கவனித்துக் கொண்டே இருப்பேன்!

மனிதன்: என்னுடன் இருந்த எத்தனையோ பேர்களை கை கழுவி விட்டிருக்கிறேன். நீ மட்டும் எம்மாத்திரம்?

மனம்: உன் நெஞ்சுக்கே இது நீதியாகப் படுகிறதா?

மனிதன்: நீதிக்குத் தலை வணங்கு என்று சொன்னதே நான் தானே?

மனம்: அதைத்தான் நானும் கேட்கிறேன்.

மனிதன்: அது பிறருக்காகச் சொன்னது! நான் சில உயர்ந்த கருத்துக்களைப் பிறருக்கென்றே உதிர்த்து விடுவது பழக்கம்! எனக்கென்று வைத்துக் கொள்ளுவதில்லை! சுயநலக் கலப்பில்லாமலே வாழ்ந்து பழகி விட்டேன்!

மனம்: எவ்வளவு கொடுமையான தத்துவம்! உனக்கு நியாயம் என்பதே கிடையாதா?

மனிதன்: யாரும் கண்டுகொள்ளாத வரை நான் செய்வது யாவும் நியாயந்தான்!

மனம்: உன்னை எனக்குப் புரியவில்லை!

மனிதன்: புரியக்கூடாது! புரிந்தால் என் ‘மவுசு’ போய் விடும். எனவே எவரும் என்னைப் புரிந்துகொள்ள விடமாட்டேன்!

[பாவம் மனசாட்சி! மேற்கொண்டு மூச்சு விட முடியாமல் செத்துப் போனது! மனிதர் தம் நடிப்புத் தரும் சுகத்தை எண்ணியவாறே கோட்டையில் கொலுவிருக்கப் புறப்பட்டார்.]

- மிளக்கந்தன் -

வடக்கே ஏன் இந்த நிலை?

வடக்கே மேகாலயா மாநிலத்திலிருந்து ஓர் அதிர்ச்சி தரும்செய்தி!

அம் மாநில முதல்வர் ஓர் ‘இமாலயத் தவறினை’ இழைத்துவிட்டாராம்!

அத்தகைய ‘கொடிய குற்றத்தை’ கூறவேண்டாமா?

தனது மகளுக்குச் சாதிவிட்டுச் சாதியில் திருமணம் செய்துவிட்டாராம். பிற்போக்குவாதிகள் பற்பல பிதற்றிக் கொண்டு முதல்வரையே எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தி விட்டார்களாம்!

தமிழகத்தில் நமது கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியில் பெண்ணெடுத்துத் தமது மருமகளாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

புரட்சிமிக்க அந்தச் செயலைத் தமிழகம் களிபேருவகையுடன் வரவேற்று வாழ்த்தியது. அனைத்துக் கட்சியினரும் பாராட்டினர்.

கடந்த அரைநூற்றாண்டுக்கு மேலாக பகுத்தறிவுப்பகலவன் தந்தை பெரியார் — பேரறிஞர் அண்ணா — அவர்தம் வழிவந்த ஒப்பற்ற தலைவர் கலைஞர் ஆகியோரின் இடைவிடாத சாதி ஒழிப்புப் பிரச்சாரத்தின் மகத்தான சாதனை இங்கு ‘கொடி கட்டிப் பறக்கிறது! வடக்கே அந்த அறிவியக்கப் பிரச்சாரம் ஒப்புக்குக்கூட நடைபெறாததால் தான் அங்கு இத்தகைய எதிர்ப்புக் கிளம்பியுள்ளது!



பிரேத விசாரணை

டாக்டர் பிச்சுமூர்த்தி நல்வழிப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டே 'வில்ஸ்' சிகரெட்டின் புகையை அறையெங்கும் பரப்பிக்கொண்டிருந்தார். கம்பவுண்டர் கந்தசாமிநாயுடு மருந்து பாட்டில்களை ஒழுங்காக அடுக்கி வைத்து பீரோவைப் பூட்டினார். தன் நீலக் கோட்டை ஒருமுறை சரி பார்த்துவிட்டு "ஆபரேஷன் ரூம்" பக்கம் சென்று அங்கு எரிந்துகொண்டிருந்த 'ஜீரோ பவர்' மின்சார விளக்கை நிறுத்திவிட்டு ஒரு சுவிட்சைப் போட்டார்.

கெடிகாரம் 'டாண் டாண்' என்று அடித்தது; மணி ஒன்பது. 'சீக்கிரம் பூட்டிவிட்டுக் கிளம்புங்களேன்' என்று சொல்லிக் கொண்டே சிகரெட்டை எறிந்து விட்டுப் புத்தகத்தையும் மேஜைமேல் போட்டுவிட்டு டாக்டர் எழுந்தார்.

தெருப் பக்கமாகத் தம்பட்ட ஒலியும் அதைத் தொடர்ந்து ஓர் ஆண் குரலும் கேட்டன. "நாளைக் காலை எட்டு மணிக்கு வினை தீர்த்த ஸ்வாமி கோயிலில் அரிஜன ஆலயப் பிரவேசம் அதி விமரிசையாக நடைபெறும். பக்தர்கள் வருக...வருக" ஆலயப் பிரவேச விளம்பரமிது.

"என்ன கம்பவுண்டர்! ஊர் ரகளைப் படுதே—உமக்கெல்லாம் சம்மதந்தானே?" டாக்டர் இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டு நாயுடுவின் முகத்தை ஆவலோடு நோக்கினார்.

"நமக்கென்னுங்க...இனி விதைச்சவங்க...இனி அறுப்பாங்க...உம்...உலகம் பெரப் போகுது போங்க" என்று ஆயாசமாகக் கூறியபடி சாவிக் கொத்தை எடுத்து விரலில் சுழற்றிக்கொண்டே நகர ஆரம்பித்தார் நாயுடு காரு. 'ஆபீஸ் லைட்'டையும் அணைத்துவிட்டு டாக்டர் பிச்சுமூர்த்தி வெளியே வந்தார்.

இருவரும் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். அந்த இருளில் வாயிற் பக்கத்து விளக்கின் ஒளி மட்டும் மங்கலாகத் தெரிந்தது. ஆஸ்பத்திரியின் வாசற்படியண்டை ஒரு உருவம் அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டு நிற்பது தெரிந்தது. "ஆ... அய்யோ... சாமி..." அது நின்றது.

டாக்டர் கையிலிருந்த 'டார்ச்' விளக்கை அடித்தார். முப்பது வயதுக்குட்பட்ட ஒரு பெண். இடுப்பில் கிழிந்த சேலை. வறண்டு காற்றில் பறந்து கொண்டிருக்கும் அலங்கோலமான கூந்தல். வெளிச்சத்தில் கண் மூடிக் கொண்டாள். பூரண கர்ப்பவதி. பிரசவ வேதனையில் எவ்வளவு கஷ்டப்படுகிறாள் என்பதைத் துடித்துக் கொண்டிருக்கும் அவளது கால்கள் காட்டின. நிற்க முடியவில்லை. வாயிற் கதவின் முகப்பைப் பிடித்துக் கொண்டு குனிந்து கொண்டாள்.

"ஆ... அய்யோ ... கடவுளே...சாமி என்னைக் காப்பாத்துங்கோ...கோடிப் புண்ணியமுண்டு" அவள் பேசவில்லை; கதறினாள்.

'ஏதடா சனியன்' டாக்டர் முணுமுணுத்துக் கொண்டார்.

"உன் ஆம்படையான் எங்கே? ஒருத்தருமில்லாமல் வந்து ஒபத்திரவம் பண்றே?" கம்பவுண்டர் அலுத்துக் கொண்டே தெரு விளக்கையும் அணைத்தார்; "எனக்கு ஒருத்தருமில்லிங்க...நீங்க தான் கடவுள் மாதிரி என்னைக் காப்பாத்தணும்...ஆ... அவசரமாகக் கீழே இறங்கினார்.

கம்பவுண்டர், கனல் தெறிக்கும்படியாக ஒரு கோரச் சிரிப்புச் சிரித்துவிட்டு "அரிஜன மங்கையா?...ஆஸ்பத்திரியில் பிரசவமாக்கும், அர்த்த ராத்திரியிலே! காலையிலே ஆலயப் பிரவேசம் பண்ணு போ" என்று குட்டி உபதேசமும் செய்துமுடித்து... 'போர்டு லைட்'டையும் நிறுத்தினார்.

"வினை தீர்த்தவூர் கிராம தர்ம ஆஸ்பத்திரி, எந்நேரமும் சிகிச்சை செய்யப்படும்." என்ற விளம்பர போர்டு இருட்டில் மறைந்து கொண்டது.

டாக்டரும் கம்பவுண்டரும் வேகமாக நடக்கத் துவங்கினர்.

அவள் நெஞ்சத்தில் சவுக்கடிகளாக இன்னும் விழுந்து கொண்டிருந்தன. சம்மட்டியால் தாக்கப்பட்ட வைரத்தைப்போல நினைவு சிதறியது.

கம்பவுண்டர் கிண்டலாகக் கேட்ட கேள்வி.. "உன் ஆம்படையான் எங்கே?..."

'ஆம்படையான்'— அவதி தாங்கமாட்டாமல் அனலிடைப் புழுப் போல் துடித்த அவள் வாய் இந்த வார்த்தையை முணுமுணுத்தது; ஆனால், சற்று ஆத்திரமாக.

'ஆம்படையான்'— அழவில்லை அவள்! அப்படியே மரமாக நின்றாள். அவள் இதயத்தின் முன் ஒரு ஏடு புரண்டது.



உலகத்துக்குத் தெரியுமா; சமுதாய அமைப்பிலே, நாட்டு நடப்பிலே உள்ள கோளாறு நஞ்சாக மாறிக் கருப்பாயியைக் கொன்றுவிட்டது என்ற உண்மை?

—இந்தியாவின் களங்கமாக இன்றளவும் கோர தாண்டவமாடும் தீண்டாமைக் கொடுமையைச் சித்தரித்துக் கலைஞரால் எழுதப்பட்ட இச் சிறுகதை — வறுமையில் வாடும் வனிதையரின் கற்பைச் சூறையாடும் 'பெரிய மனிதர்'களின் முகமூடியையும் கிழித்துக் காட்டுகிறது!

அய்யோ...அப்பா" மீண்டும் கதற ஆரம்பித்தாள் கர்ப்பவதி.

"உம்...சீக்கிரம 'கேட்'டைப் பூட்டு "டாக்டர் கம்பவுண்டருக்கு உத்தரவிட்டு விட்டு.. அந்தப் பெண்ணின் முகத்தில் மீண்டும் ஒருதடவை 'டார்ச்சை' அடித்து, "அனாதையாம் அனாதை...அனாதைக்குப் பிள்ளை 'ஆசை!" என்று கிண்டல் செய்தார். "எல்லாம் காசுக்குத்தான் 'கம்பவுண்டர் சிரித்துக் கொண்டே இந்த வார்த்தைகளை டாக்டரின் முன்னே சமர்ப்பித்து ஏதோ மேதாவித்தனமாகப் பேசி விட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண்டார்.

"ஏ...நீ ... என்ன ஜாதி? டாக்டருக்குக் கொடுக்கப் பணம் இருக்கா?" நாயுடு காரு மீசையை முறுக்கிக் கொண்டே அவளைப் பார்த்தார்.

"நான்... பறைச்சி சாமி- எங்கிட்ட ஏதுங்க பணம்?"

இதை அவள் முடிக்கவில்லை "தூ...பற நாயே...துரத்து க்கழுதையை...உம்...ஒத்தி நில்லு!" டாக்டர் பிச்சுமூர்த்தினார். "அட கடவுளே...தயவில்லிங்களா?' பறைச்சி உரக்கக் கதறினாள்; ஏமாற்றத்தோடு கலந்த அந்த மொழிகள் ஆஸ்பத்திரியின் அருகேயுள்ள வினைதீர்த்த ஆண்டவன் கோயில் சுவரில் மோதி எதிரொலித்தன.

கிர் ரென்று ஒரு மோட்டார் கார் வந்து நின்றது... "டாக்டர் சார்... பண்ணையிலே அய்யாவுக்குத் தலைவலியாம்; அவசரமாகக் கூப்பிட்டு வரச்சொன்னார்"— டிரைவர் இதைச் சொல்லி முடித்தான்.

"கம்பவுண்டர்! கைப்பெட்டி இருக்கிறதா?" என்று கேட்டுக்கொண்டே காரில் ஏறி அமர்ந்து கொண்டார் டாக்டர். "இருக்கிறது" நாயுடுகாரு தலையசைத்துக் கொண்டே முன்சீட்டில் உட்கார்ந்தார். "ரொம்ப சீரியசோ?" பிச்சுமூர்த்தி டிரைவரிடம் வெகு அவசரமாகப் பதிலை எதிர்பார்த்தார். மோட்டார் கார் பறந்துவிட்டது.

இங்கே... வாயிற்படியைப் பிடித்துக்கொண்டு, வேதனையால் வாடிய பறைச்சி. "ஆ அம்மாடி... அய்யோ கடவுளே..." சப்தம் ஓயவில்லை. ஆனால் 'அந்த' வார்த்தைகள்

மூன்று வருட வரலாறு—

கருப்பாயி காத்தமுத்துவின் பெண்ஜாதி. காத்தமுத்து சோலையூர்க் கிராமத்துப் பெரிய பண்ணையில் ஒரு பண்ணையாள் பண்ணைக்கார அண்ணாமலை முதலியார் 'தருமதுரை' என்று பெயர் வாங்கின ஆசாமி.

கோயில்கள் கட்டுவது, கும்பாபிஷேகங்கள் செய்வது என்றால் அமோகப் பிரியமுள்ளவர் அண்ணாமலை முதலியார்.

"அடடா எத்தனை தர்மம் எத்தனை சத்திரம்? தர்மமே உருவாக வந்த உத்தமரய்யா அவர்!" பண்ணை முதலாளியின் பகுதி மனையில் குடியிருக்கும் பார்த்தசாரதி அய்யங்காரின் நாமாவளி இது.

"அண்ணாமலை முதலியார் கட்டிய கோயில்லய்யா அது. அவர் ஆட்டினபடி ஆடணுமாக்கும்; ஆமா! ஆலயப் பிரவேசமாவது மண்ணாவது! பள்ளு பறைகளை உள்ளே விடறதுக்கு அவர் சம்மதிக்க மாட்டாருதான். அக்கிரம விஷயத்திலே அவரு இணங்க மாட்டாராக்கும். தெரியுமா?"

பண்ணையில் கணக்குவேலை பார்க்கும் கண்ணாயிரம் பிள்ளையின் கர்ஜனை இது.

மூன்று வருடங்களுக்கு முன் மூஷிக விநாயகர் கோயில் திருப்பணி பிரம்மாண்டமாக நடைபெற்றது. இப்பொழுது உலவும் ஆலயப் பிரவேச ஊசலில் அதில் அரிஜனங்களை நுழைய விடுவதற்குப் பகீரதப் பிரயத்தனங்கள் நடைபெறுகின்றன. கோயில் கட்டும் பொழுது கர்ப்பக் கிரகத்திற்கு ஏற்றப்பட்ட கருங்கல் விழுந்து கருப்பாயி புருஷன் காத்தமுத்து உயிர்விட்டான்.

உருண்டு திரண்டு ஒய்யாரமாக இருந்த காத்தமுத்து நசுங்கி நாசமானான். மகா

கருணாநிதி

கணபதியின் கோயிலுக்கு மண்டையைத் தேங்காயாக உடைத்து இரத்தத்தால் முதல் கும்பாபிஷேகம் நடத்தி வைத்தான். உயிருக்குயிரான கருப்பாயியை விட்டுவிட்டு அவன் ஆண்டவன் ஆலயத்திலேயே பலியானான்.

காத்தமுத்துவைக் காவு கொடுத்து கணபதி ஆலயத்தைக் கட்டி முடித்தார் அண்ணாமலை முதலியார்.

ஆண்டு நகர்ந்தது

கருப்பாயி உயிர் வாழ்ந்தாள் ஒருநாள் கருப்பாயி பண்ணையாரின் மாட்டுத் தொழுவத்தில் சாணம் எடுத்துக் கொண்டிருந்தாள். அண்ணாமலை முதலியார் "என்ன; வேலை முடிந்ததா?" என்று கேட்டுக்கொண்டே நுழைந்தார். முதலியாரின் என்றுமில்லாத பிரவேசம் கண்ட கருப்பாயி திடுக்கிட்டாள்... முதலியாரின் காம வெறி தலைவிரித்தாடியது. பாவம்! கருப்பாயி பலி ஆனாள்.

நாட்கள் உருண்டோடின. கருப்பாயி கசந்த வாழ்வில் கற்கண்டின் சுவையைக் கண்டாள். எஜமானனின் தயவு யாருக்குக் கிடைக்கும்?

கருப்பாயி கர்ப்பவதி.

வெளியே தலைநீட்ட வெட்கம். ஊரிலிருந்தால் தலையை வெட்டி விடுவேன் என்று முதலியார் இறுதி எச்சரிக்கை விடுத்தார். அவசரச் சட்டம்; அந்த அபலைப் பறைச்சியால் அதைத் தாங்க முடியுமா? எஜமான் உத்தரவல்லவா கருப்பாயி தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டாள்.

மாட்டுத் தொழுவத்திலே ஆவலாக நுழைந்த அதே முதலியார் "எங்காவது காட்டுப் பக்கம் ஓடிவிடு!" என்று தன் காதலிக்குக் கட்டளையிட்டார். முதலாளியின் கருணை ஜாதி பேதம் பாராட்டாத பரந்த மனப்பான்மை; ஏழையிடம் அன்பு காட்டும் பொதுவுடைமைத் தத்துவம் — இவைகளை நினைத்து மகிழ்ந்ததோடல்லாமல் தன் கட்டுமஸ்தான தேகத்தின் அழகு பற்றியும் இறுமாந்திருந்தாள்

இழந்த வாழ்க்கையை முதலியாரின் தயவால் ஓரளவு செப்பனிட்டுத் தன் குழந்தையையாவது வளர்க்கலாம் என்று கனவு கண்ட கருப்பாயி கடைசியில் தேச சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தாள். தேச சஞ்சாரத்தின் முடிவு? வினை தீர்த்தவூர் தர்ம ஆஸ்பத்திரியின் வாசற்படியில், வேதனையோடு நிற்கிறாள்.

ஃ ஃ ஃ

காலை வந்தது ஆலயப் பிரவேசத்துக்கான ஏற்பாடுகள் ஆடம்பரமாக நடந்துகொண்டிருந்தன. டாக்டர் பிச்சுமூர்த்தி ஒரு கதர்த் தொப்பி சகிதம் கோயில் டிரஸ்டியோடு அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தார்.

கோயிற் குளக்கரையில் ஒரே கூட்டம்:

"தூக்கு ...தூக்கு...மெள்ள மெள்ள... மெதுவாகத் தூக்கு"

"ஹாங் ... அப்படித் தான்..."

"ஏய் ... நீயுங் கூடப் போடா..."

"படி வழுக்கப் போறது மெதுவா ஏறுங்க..."

குளத்தில் இறங்கியிருந்த ஆட்களிடம் கரையில் நின்ற கும்பல் இப்படி எச்சரிக்கை செய்து கொண்டு இருந்தது.

"சண்டாளனைக் கோயிலில் விடுகிறதுன்னு சாமிக்கே அடுக்கவில்லை... சகுனத்தடை ஏற்பட்டு விட்டது இப்படி ஒருவர் பீடிகை போட்டுப் பிரசங்கம் செய்தார்.

"தலைமுறை தலைமுறையாய்க் காணாத பழக்கம். இந்த அக்கிரமத்தை ஆண்டவன் சகிப்பாரா? திருக்குளத்தையே தீட்டாக்கி விட்டாரப்பா" மற்றும் ஒருவரின் உரையாடல் இவ்விதம்.

"போயும் போயும் இன்னைக்கா விழுந்து சாகணும்? அடப் பரிதாபமே — ஒரு இரக்க ஜீவன் இப்படிப் பேசிற்று.

"கர்ப்பவதியப்பா' ஒரு கிழவி அனுதாபப்பட்டாள்.

"இரண்டு ஆத்மா... இன்னைக்குக் கங்காதேவி ஆட்கொண்டாள்' ஒரு ஆத்மஞானியின் சொற்பொழிவு இது;

குளத்தில் விழுந்து தற்கொலை செய்துகொண்ட கருப்பாயியின் பிரேதம்கரைக்குக் கொண்டு வரப்பட்டது. போலிசார் பிரேதத்தைப் பார்வையிட்டனர். பிரேத விசாரணைக்கு ஏற்பாடாயிற்று. எந்த ஆஸ்பத்திரியில் பறைச்சிக்கு இடமில்லையென்று முதல் நாளிரவில் விரட்டியடித்தார்களோ, அதே ஆஸ்பத்திரியில் அந்தப் பறைச்சியின் பிரேதம்தாராளமாக அனுமதிக்கப்பட்டது.

பிச்சுமூர்த்தி பிரேத விசாரணைக்கு உதவியாகத் தன் வேலையைத் தொடங்கினார். அவருக்கும் அவரது கம்பவுண்டருக்கும் கருப்பாயி இறந்த காரணம்?

ஊர் கூறிற்று கடவுளின் திருவிளையாடல் என்று. டாக்டர் நடித்தார், காரணம் கண்டுபிடிப்பதாக! உலகத்துக்குத் தெரியுமா; சமுதாய அமைப்பிலே, நாட்டு நடப்பிலே உள்ள கோளாறு நஞ்சாக மாறிக் கருப்பாயியைக் கொன்றுவிட்டது என்ற உண்மை? யாருக்குத் தெரியும்? அது தெரிந்தால்தானே பிரேத விசாரணையில் வெற்றியடைந்ததாக அர்த்தம்?

அண்ணா வளர்த்த அரசியல் நாகரிகம்!

★

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏறத்தாழ நாற்பதாண்டுக் காலத்திற்கு மேற்பட்டு பொது வாழ்க்கையில் எவ்வளவு அல்லல்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் தன்னுடைய கொள்கைகளை நாட்டு மக்களுக்காக எடுத்துச் சொன்னார் என்பதை நாம் யாரும் மறந்துவிடக் கூடாது.

பெரியாருடைய பெரும் படைத் தளபதியாக விளங்கிய அண்ணா அவர்கள் திராவிட இயக்கம் அரசியல் ரீதியாகவும் தமிழ்நாட்டிலே வளர்ந்திட வேண்டும் என்கிற நோக்கம் கொண்டு சமுதாயத் துறையில் பெரியார் உழைக்கட்டும்; அரசியல் துறையில் நாம் நம்முடைய பணியை ஆற்றுவோம் என்ற நிலையெடுத்து தி.மு. கழகத்தைத் தொடங்கினார். அப்படி தொடங்கிய நேரத்தில் அண்ணா அவர்கள் ஒன்றைத் திட்ட வட்டமாகச் சொன்னார். பெரியாரிடமிருந்து பிரிந்து தி.மு. கழகம் என்ற இந்த அரசியல் இயக்கத்தை நாம் தொடங்குகிறோம் ஆனால்நம்முடைய தாய்க்கழகத்தை அழித்திட வேண்டும் என்கிற தருக்குமிகு எண்ணமோ குறுகிய நோக்கமோ நமக்குக் கிடையாது. திராவிடர் கழகம் சமுதாயத் துறையில் பணியாற்றும்; தி.மு. கழகம் அரசியல்துறையில் பணியாற்றும்; தமிழர்களுக்கு ஒரு கேடு வருமானால், திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருக்குமேயல்லாமல் ஒன்றையொன்று மோதிக்கொண்டு தமிழர்களைக் காட்டிக் கொடுத்துவிடாது என்று திட்டவட்டமாக அறிவித்தார்கள். அதன்படியே நடந்தார்கள்.

ஆனால் இன்றைக்குத்தாய்க்கழகத்திலிருந்து யாராவது பிரிந்துவிடுகிறார்கள் என்றால், இன்றைக்குள்ள அரசியல் நாகரிகம் தாங்கள் கருவாகி, உருவாகி பத்து மாதம் வளர்ந்த தாயின் வயிற்றைக் கிழித்து எறிந்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன் என்று சொல்கின்ற அரசியல்வாதிகள் நிறைந்த காலம்இது பெரியாரிடமிருந்து பிரிந்தபிறகு தி.மு. கழகம் பதினெட்டு ஆண்டுக்காலம் எதிர்க் கட்சியாக விளங்கியபோது: அண்ணா அவர்களுக்கு சில தாக்குதல்கள்வந்தநேரத்தில் கூட, அதை அண்ணா எவ்வாறு தாங்கிக் கொண்டார் என்பதையெல்லாம் நீங்கள் மறந்திருக்க முடியாது.

"பெரியார் என்னைத் தாக்குகிறார்; வசை பாடுகிறார்: கடுமையாகப் பேசுகிறார்; இதைப் பார்த்து தம்பிமார்களே யாரும் கவலைப்படாதீர்கள்; நம்முடைய அண்ணனை இப்படியெல்லாம் அப்பா திட்டுகிறாரே என்று நினைக்காதீர்கள். பெரியார் என்னைப் பொதுவாழ்க்கைக்குப் பழக்குகிறார் என்று எண்ணிக் கொள்ளுங்கள்; குட்டி யானையைத் தாய் யானை கானகத்தில் கீழே போட்டு புரட்டிப் புரட்டி எடுக்கும்; காலாலும் துதிக்கையாலும் உதைத்து அதற்கு பலம் உண்டாக்கும்; இப்படிப்பட்ட பயிற்சி கானகத்தில் நடைபெறும் வேடிக்கையான செயல். அதைப் போலத்தான் தாய் யானையான பெரியார் குட்டி யானையான என்னைப் பழக்குகிறார். பயிற்சி தருகிறார் என்று நீங்கள் எண்ணிக் கொள்ள வேண்டும்' என்ற பெருந்தன்மையான பதிலை அண்ணா அவர்கள் தன்னுடைய தம்பிமார்களுக்கு விளக்கமாகத் தந்தார். அப்படித் தந்த காரணத்தால் தான் மீண்டும் ஒரு நேரத்தில் ஒருவரையொருவர் சந்திக்கும் நேரத்தில் ஒருவரைப் பார்த்து ஒருவர் தலை குனிய நேரிடாது என்ற நிலையைப் பத்தாண்டுக் காலத்திற்கு முன்பு எடுத்தார்.

ஆனால் இன்றைக்குள்ள அரசியல் நிலைமை அவ்வாறல்ல. முதல்நாள் மேடையில் ஒருவரைப் பார்த்து கர்ண கடூரமான வார்த்தைகளை எல்லாம் கொட்டிவிட்டு; மறுநாள் மாலையில் அவருடைய பாதாரவிந்தங்களில் விழுந்து, நேற்று நான் பேசியதெல்லாம் தவறு என்று கூறி பதவி கிடைத்தால் போதும் என்று கெஞ்சுகின்ற ஈனத்தனமான அரசியல் இன்றைக்கு நாட்டிலே நடைபெறுவதை நாம் காண்கின்றோம்.

— தலைவர் கலைஞர்

(அம்மையார்குப்பம் அண்ணா சிலைத் திறப்புவிழாவில்)

ஒருமைப்பாடா - உணர்வுக்கேடா ?

இந்தியத் துணைக் கண்டத்தின் தலைமையமைச்சராக இருந்தாலும் மற்றும் மைய அரசிலேயிருந்து வருகை புரிகின்ற வேறு எந்த அமைச்சர்களாக இருந்தாலும் பல்வேறு மாநிலங்களில் செல்லும் போது மாநிலத்திற்கேற்றவாறு சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு வாயில் வந்த எதையோ ஒன்றைச் சொல்லி விட்டுச் செல்வதைத்தான் தங்களது குறிக்கோள்களாகக் கொண்டிருக்கிறார்கள்.

அதிலும் மொழிப் பிரச்சினையிலே அதை அணுகும் முறை முற்றிலும் வேறாகவே இருக்கிறது.

மொழி வழி மாநிலத்தின் அடிப்படையில் எல்லாமொழிகளும் தேசிய மொழிகளே என்ற அறிவிப்பு ஒருபுறம். மும்மொழித் திட்டம் மறுபுறம். குறிப்பாக இந்தியைப் பரப்புவதிலும் அதனை இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஆட்சி மொழியாக்க மும்முரமான நடவடிக்கைகள் இன்னொருபுறம், இந்த வகையில் மைய அரசு, ஒருவரே பல வேடங்களை ஏற்று நடிப்பது போல் இயங்கி வருகிறது.

அனைத்து மொழிகளுமே தேசிய மொழிகள் என்றாகி விட்ட பிறகு ஆட்சி மொழி வேறு வேண்டும் என்பதிலே பொருள் இருப்பதாக எந்த மூடனும் ஒப்புக் கொள்ள மாட்டான்.

மொழி வளர்ச்சிக்கென மைய அரசால் ஒதுக்கப்படும் தொகையிலே மற்ற மொழிகளுக்கு ஒதுக்குகின்ற தொகைகளைக் காட்டிலும் இந்தி மொழிக்கு அதிக அளவில் தொகை ஒதுக்கப்படுகிறது என்றால் அந்த இந்தி மொழி வளரவில்லை யென்பதும் அதிலே வளமில்லை யென்பதும் தெளிவாக விளங்குகிறது. மக்களிடையே செல்வாக்கில்லாத மொழியைப் பேச்சாலும் எழுத்தாலும் பொருளாலும் மாநிலத்திற்கு மாநிலம் வெவ்வேறாக இயங்கி வரும் மொழியை ஒரு நாட்டிற்கு ஆட்சி மொழியாக்க முயலுவது என்றால் பல்வேறு கலாச்சாரங்கள் பண்பாடுகள் நிலவி வருவதை மறந்து அந்த மக்களின்மேல் ஒரு மொழி திணிக்கப்படுகிறது என்றால் அதனைப் பேதமை எனவும் சொல்ல முடிவதில்லை. அறிவுடைமை என வாதிடவும் முடிவதில்லை.

எந்தக் கட்சி இந்தியத் துணைக் கண்டத்தினை ஆள நேர்ந்தாலும் சரி எந்தத் தலைமையமைச்சர் இருக்கையில் அமர்ந்தாலும் சரி அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் இந்திக்கு வக்காலத்து வாங்குபவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

மொழியுணர்வைப் பொறுத்தவரையில் நேருவிலிருந்து இன்றைய தேசாய் வரை ஒரே கொள்கையையுடையவர்கள் தான் என்பதிலே இது வரை யாருக்கும் ஐயப்பாடு இல்லையென்றாலும் இந்தி மொழிக்கு நாட்டிலே எவ்வளவு எதிர்ப்பு இருக்கின்றது என்பதை நேரு புரிந்துகொண்டது போல் வேறு யாரும் புரிந்து கொள்ளவில்லை.

அதனால்தான் நேரு அவர்கள் இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும் எனவும் இந்தியின் ஆதிக்கம் கட்டுப்படுத்தப்படும் எனவும் உறுதி மொழி தந்தார்கள்.

இந்தி ஆட்சி மொழியாவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதிலே நாற்பதாண்டுக்காலத்துக்கு மேலாகவே தமிழக மக்கள் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டு புதியதொரு வரலாற்றினைப் பெற்றிருக்கிறது.

எத்தனையோ கழகக் கண்மணிகள் கடுங்காவல் தண்டனையை மேற்கொண்டிருக்கிறார்கள். துப்பாக்கிக் குண்டுகளுக்குத் தங்களது தோள்களை உயர்த்திக் காட்டி மடிந்திருக்கிறார்கள். தனக்குத்தானே தீயிட்டு வெந்த சாம்பலுக்கு

மல்லை சீவ நடராசன்

தமிழ் மணம் ஊட்டியிருக்கிறார்கள்.

ஏன்? எங்கிருந்தோ வந்த இந்தி எம் இனிய தமிழைச் சுட்டெரிக்கும் செந்தீயாக மாறுவதென்றால் அந்தக் காட்சியை நான் காணவே வேண்டாம்; அந்தக் காட்சியைக் காண நான் உயிரோடுஉளுத்த மரமாக ஒதியமிலாராக உணர்ச்சியற்ற மரக் கட்டையாக உலவ வேண்டாம் என்பதற்காகத்தான் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மொழி யுணர்வைப் பொறுத்த மட்டில் தமிழகத்தில் தமிழர்களின் உடலில் ஓடும் குருதியோடு தமிழ்ப் பற்று இணைந்து விட்டிருக்கிறது என்பது உலகறிந்த உண்மை.

ஒரு மொழிக்காகக் குருதி சிந்தியதாகவோ தீயிட்டுத் தன்னை சாகடித்துக் கொண்டதாகவோ எந்த நாட்டின் வரலாறும் இருந்ததில்லை.

ஆனாலும் அதே நேரத்தில் மற்ற மொழிகளை நாம குறைத்து மதிப்பிடவும், மற்ற மாநிலத்து மொழிகள் தகுதியற்றவை யெனவும் அவர்களுக்கு மொழிப்பற்றே இல்லையெனவும் வாதிட விரும்பவில்லை. இந்தக் காரணத்தினால்தான் அனைத்து மொழிகளும் தேசிய மொழிகளே என்ற நிலையை மைய அரசு உணர வேண்டுமெனவும்; உணர்ந்து ஒழுக வேண்டுமெனவும் நாம் விரும்புகிறோம். மற்ற மாநிலத்து அரசியல் வாதிகளும் மொழியியல் வல்லுநர்கள் இத்தகைய கருத்துக்கு இணக்கமான உடன்பாட்டைப் பொது மேடையிலும், பாராளுமன்றக் கூட்டங்களிலும் அவ்வப்போது தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

பொதுவான பாரபட்சமற்ற நியாயமான நிலையிலே இப்பிரச்சினைக்குத் தீர்ப்பு காணுவது ஆளும் கட்சியின் விவேகத்திற்குச் சான்று பகர்வதாகும்.

மாறாக, மற்ற மொழியுணர்வுகளை மதியாது, எடுத்துரைத்தாலும் கேளாது ஏதேச்சாதிகாரப் போக்கிலே மைய அரசு செயல்பட நினைக்குமேயானால் இந்தி வெறியர்களின் கூக்குரலுக்குச் செவி சாய்த்து அதற்கான முயற்சியிலே ஈடுபடுமானால் இந்தியப் ஒருமைப்பாடு என்று வாய் கிழியப் பேசுவதில் பயனில்லை.

பல்வேறு மொழி பல்வேறு இனம் பல்வேறு பண்பாடு இவைகளை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒருமைப்பாடு என்று சொல்வதன் முழுக்கருத்தையும் அது ஏற்படுத்தும் அவசியத்தையும் நாம் உணர்ந்திருக்கிறோம். உடன்பாட்டைத் தெரிவித்திருக்கிறோம்.

அங்ஙனம் எல்லோராலும் முழுமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிற ஒருமைப்பாட்டுணர்வுக்குக் குந்தகம் விளைவிக்கின்றவகையிலே அதனைக் குழிதோண்டிப்புதைத்து வருகின்ற நடைமுறைகளிலே தெரிந்தோ தெரியாமலோ மைய அரசு தன்னை ஆட்படுத்திக் கொண்டு இந்தி தான் ஆட்சி மொழியாக வேண்டும் என்கின்ற ஆதிக்க வெறியர்களோடு கூடிக்குலவிக் கொண்டு இந்தியை மறைமுகமாகத் திணிக்க முற்படுமேயானால் அதைப் போல ஒரு பித்துக்குளித்தனமான காரியம் வேறு எதுவும் இருக்க முடியாது என்பதை நாம் அவர்களுக்குச் சுட்டிக் காட்டுகின்ற நிலையிலே இருக்கிறோம்.

ஏனெனில் மைய அரசிலே அமர்ந்து கொண்டிருப்போரின் சொல்லும், செயலும் இன்றைக்கு நிலையற்ற தன்மையை உண்டாக்கிவிட்டிருக்கிறது.

ஆட்சிமொழி பற்றிய பிரச்சினையில் மைய அரசின் நிர்வாக இயந்திரங்கள் முடுக்கிவிடப்பட்டு எங்கும் இந்தி, எதிலும் இந்தி என்கின்ற அளவுக்குத் தீவிரமாக்கப்பட்டிருக்கின்றன.

நான் அடிப்பதுபோல் அடிக்கிறேன் நீ அழுவது போல் அழு என்கின்ற பாவனையிலே மத்திய அமைச்சர்கள் மற்றவர்களை ஏமாளிகளாக நினைத்துக் கொண்டு, வேடிக்கை காட்டித் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில் கர்நாடக மாநிலத்தில் கன்னட மொழி இலக்கிய மாநாட்டில் தலைமையமைச்சர் தேசாய் அவர்கள் கலந்து கொண்டு பேசுகின்றபொழுது ஒவ்வொரு மாநிலமும் அந்தந்த மாநில மொழிகளிலேயே நிர்வாகத்தை நடத்தலாம் என்ற கருத்தினை ஏதோ புதியதாக எண்ணிக்கொண்டு சொல்லியிருக்கின்றார்கள்.

அனைத்து மொழிகளுமே தேசிய மொழிகள் என்ற அந்தஸ்தினைப் பெற்றுவிட்ட பிறகு அந்தந்த மொழிகளில் தான் நிர்வாகம் நடைபெறும் என்பதை சட்டக் குருடன் கூட ஒப்புக் கொள்வான்.

தாய்மொழி, தொடர்பு கொள்ளப் பொதுவான வேற்று மொழியென்ற இரு மொழித் திட்டத்தை படித்தவன்கூட, சிந்திக்கத் தெரிந்தவன்கூட ஒப்புக் கொள்கிறான்.

ஆங்கிலம் மட்டுமே கற்ற ஒரு வெள்ளையன் எந்த மூலையிலும் போய்ச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறான். 'இந்தியாவுக்குப் போகிறோம்' என்ற காரணத்தினாலேயே அவன் இந்திய மொழிகளைக் கற்றுக்கொண்டு இந்தியாவுக்கு வருவதில்லை.

அதுமட்டுமல்ல — தென் பகுதிகளில்தான் நம்மால் பிழைக்க முடியும் என்ற நிலையில் இருக்கின்ற வடமாநிலத்தவர்கள்கூட தமிழோ, தெலுங்கோ, மலையாளமோ, கன்னடமோ கற்றுக்கொண்டு இங்குவந்து வட்டிக் கடை வைக்கவும் இல்லை. பெட்டிக் கடை வைக்கவும் இல்லை.

அவசியம் நேரும்போது, அங்குதான் நமக்குப் பிழைப்பு என்ற நிலையைக் கடைப்பிடிக்கும் நிர்ப்பந்தம் ஏற்படுகின்றபோது ஒவ்வொரு மனிதனும் தன் மொழித் தேவையை நிறைவு செய்து கொள்ளுகிறான்.

இந்திதான் ஆட்சி மொழியாக வேண்டும் என்ற வேண்டாத கருத்தை விலக்கிவிட்டு இன்றைக்குத் தேவையானது பற்றிச் சிந்திப்பதும் செயல்படுவதும் இன்றைய ஆட்சியின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்;

வீணான பிரச்சினைகளைத் தானாக அள்ளித் தலையில் போட்டுக் கொள்வதிலோ, வழியே போன வம்பை வீட்டு வரை வந்து போ என்று வரவேற்பு வாயிலில் வைப்பதிலோ இன்றைக்கு ஜனதா ஆட்சி கண்ணும் கருத்துமாக இருக்குமானால் அது ஆளும் ஜனதாவுக்கு ஆதரவு தரக் கூடிய செயலாக இருக்காது.

பல கொடுமைகளுக்கு ஆளாகிக் காப்பாற்றப்பட்ட ஜனநாயகத்தைச் சுற்றி சர்வாதிகாரக் கழுகுகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன,

நெடிய சிந்தனை நேர்மையான செயல் எவரும் போற்றக் கூடிய மனிதாபிமானம் இவைகளைக் கருத்தெனக் கொண்டு ஆக்கப்பூர்வ பணிகளில் அமைவது நலம்.

மொழிவெறி மொழிப் பற்று இவைகளை இனம் பிரித்துப் பார்க்கும் சக்திகொண்டு இப்போதைக்கு மட்டும் நேருவின் உறுதிமொழி சட்ட வடிவம் பெறுமானால் ஒருமைப்பாடு ஓங்கும்.

காலம்தான் கண் திறக்க வேண்டும் என்ற கட்டாயத்தை மறந்து தானே கண்ணைத் திறந்து ஒளியுலகைக் பார்ப்பார்களானால் அது அவர்களுக்கும் நல்லது அதைவிட நாட்டுக்கு மிக மிக நல்லது.

தொலைபேசி எண் கடை: 33213 இல்லம் 31922

தரம்நாடுவோர் தவறாமல் நாடுவது

தமிழக எண்ணெய்ப் பலகாரம்

தயாரிப்பு விற்பனை நிலையம்

92, திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

உரிமையாளர் பே. தேவசகாயம்

தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்தி மிட்டாய், அதிரசம், இனிப்பு சேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்பு காரவகைகள்

கிளைகள்: 26, மேலமாசி வீதி, 70, சுவாமி சன்னதி 72, அழகர்கோவில் சாலை, 72 C, வன்ஹால்ரோடு, மதுரை.

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத்தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்

எம். கே. டிரேடர்ஸ்

H.O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை

SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33

B. O 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28

திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை!

நல்லாட்சி மலர கூட்டாட்சி தேவை!

நேற்றறைக்கிருந்த நீண்ட நெடும் புகழை நினைவூட்டித்தான் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆற்றல் மிகப் பெற்றிருந்தும் ஆள்பவர்களாக இல்லாமல் ஆளப்படுபவர்களாக மாறி நிற்கும் கீழ்நிலை எண்ணி மனங் குமுறி எழச்கூட மான உணர்வில்லாமல் மண்ணில் நடைபோடுவதை இடித்துக் காட்டிய பின்னரும் துடித்து எழாமல் தூங்கித்தான் கிடக்கின்றோம். வந்தேறு குடிகள் வந்து நுழையும் மொழிகள்—பிழை மலியும் கொள்கைகள் நுழைவதற்கு தமிழ் நிலத்தின் கதவுகள் காலங் காலமாகவே திறந்து கிடக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகமாம் தமிழ் இன நில மொழிப் பண்பாட்டு மீட்சிக்கான பேரியக்கம் மட்டும் தோன்றி இராவிட்டால் ஒளி மிகுந்த எதிர் காலம் உருவாகக் கிடைத்த ஒரே வாய்ப்பும் இல்லாமல் போய் இருக்கும்.

உண்மையான பொது உடமைக் கட்சி ஒண்டமிழ் நாட்டில் ஒப்பில்லாத தி. மு. கழகமே என முதல் பொது மாநாட்டில் பேரறிஞர் அண்ணா முழங்கியது காலத்தால் நிருபிக்கப்பட்டுவிட்ட பேருண்மையாகும்.

முதலீடு செய்து பணத்தைப் பெருக்குவதாலே ஏனைய நாடுகளில் மனிதனைச் சுரண்டும் முதலாளி உருவாகின்றான். இங்கோ முதலீடே செய்யாமல் முதலாளியைக் கூடச் சுரண்டக் கூடியவனாக-பிறப்பாலே உயர்ந்தவனாக பிறரைச் சுரண்டியே வாழக் கூடியவனாக உருவாகிற ஒரு கூட்டத்திடம் சிக்கிச் சீரழியும் ஓரின உயர்வுக்கு-உரிமைக்கு போர்ப்பரணி பாடிய தி! மு. கழகம்-பொது உரிமையோடு கூடிய பொது உடமைத் தத்துவ வெற்றிக்காக போராடிய அரசியல் இயக்கமாக உலக வரலாற்றில் நிச்சயம் இடம் பெறும்.

சோவியத் நாட்டுத் தலைமையின் சொற்படியே தான் பூமியிலே பொது உடமை பூத்திட வேண்டும் என்பது சுயமரியாதை உள்ளவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாத ஏற்பாடு!

இன மொழிப் பண்பாட்டு மேம்பாட்டினை எள்ளத் தக்கதாக இந்திய கம்யூனிஸ்டுக்கள் எண்ணியதால்தான் தமிழ் நிலத்தில் கம்யூனிஸ்டுகள் கால்டிகளை அழுத்தமாக பதிக்க முடியவில்லை.

முதலாளித்துவத்தை எதிர்ப்பதாக முழங்கிக்கொண்டிருக்கும் இந்தியக் கம்யூனிஸ்டுகள் வடநாட்டு முதலாளியின் பெயரைச் சுமந்துகொண்டிருக்கும் டால்மியா புரத்தின் பெயரை மாற்ற வேண்டும் என்று போராடிய போது முணுமுணுத்த காரணத்தால் தான் அவர்கள் கட்சி முன்னேற முடியாமல் தடுமாறிக் கிடக்கின்றது.

செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகரம்-லெனின் கிராடு ஆனால் அதைப் பாராட்டும் மனப்பான்மை இங்குள்ள கம்யூனிஸ்டுகளுக்கு உண்டு. ஜார் ஆட்சிக்கால பெயர் கூடாது என்று சோவியத் நாட்டிலே சுயமரியாதை உணர்வோடு சூட்டப்பெறும் புதுப் பெயர்களை போற்றும் மனவளம் இந்திய கம்யூனிஸ்டிற்கு உண்டு; ஆனால் கல்லக்குடி பெயர் மாற்றத்தைஎள்ளி நகையாடுகிறார்கள் என்றால் இவர்களை என்னவென்று சொல்வது?

லெனின் சிலைகள் சோவியத் நாட்டிலே இடம் பெற்றுள்ளது கண்டு இந்தியக் கம்யூனிஸ்ட்டால் மகிழ முடியும்.

பேரறிஞர் அண்ணாவின் சிலைகள்பொற்றமிழர்திருநாட்டில் நாட்டப்படுவதைத்தான் இந்தியக் கம்யூனிஸ்டுகளால்

·நந்திவர்மன்·

பொறுத்துக் கொள்ள முடியாது என்றால் அவர்களின் மன எரிச்சலுக்கு மருந்து ஏது?

கன்னித் தமிழர் காவல் தெய்வமாம் கலைஞர்க்கு சிலையென்றால் கம்யூனிஸ்டுக்கள் கண்ணில் கனல் வெளிப்படுவானேன்?

செயல் ஒன்றுதானே என்று பாராட்டும் சிந்தனை கம்யூனிஸ்டுக்கு ஏன் வரவில்லை. சோவியத் நாட்டிலே லெனினுக்கு சிறப்பென்றால் சொந்த மண்ணிலே அண்ணாவுக்குச் சிறப்பளிக்கப்படுவது எப்படி தவறாக முடியும்?

வங்காளத்தில் வள்ளுவன் பெயரால் பல்கலைக் கழகம் வந்ததற்குப் பின்னால் புதுவையில் அரவிந்தர் பெயரால் பல்கலைக்கழகம் என்றால் ஏற்றுக் கொள்ளத் தயார்.

தமிழ்ச் சான்றோர்க்கு எங்கேனும் எவரேனும் மதிப்பு காட்டட்டும் — பிறகு நாம் பிறரை ஏற்றிப் போற்ற முடியும் என்று எழுதினேன்.

எங்கிருந்தோ வந்தவன் பெயராலே இங்கே திருவனங்கள் — வீதிகள்--நினைவிடங்கள்! எங்கிருந்தோ வந்தவரெல்லாம் இங்கிருந்து ஆளும் இழிநிலையே மேற்சொன்ன நிலைமையை மெள்ள மெள்ள வளரவிட்டதால் ஏற்பட்டது தான்!

தேசிய இனங்களின் தனித்தன்மையை விட்டுக் கொடுக்கப்படாமலே கம்யூனிச நெறி கடைபிடிக்கப்பட முடியும் என உலகிற்கு காட்டிய ஒரு சிலரில் கலைஞருக்கும் இடமுண்டு என்பதனை வரலாறு காட்டும்.

டிட்டோ என்ற தனி மனிதர் தன்நாட்டு நலனை பலிகொடுத்து சோவியத் மேலாதிக்கத்தை ஏற்க மாட்டேன் என்று அன்று குரல் கொடுத்தபோது எள்ளி நகையாடியோர் இருந்தார்கள்.

இன்றோ டிட்டோவின் பாதையை பின்பற்றி ஐரோப்பிய நாடுகளிலே பல்வேறு தலைவர்கள் தத்தமது நாட்டு எல்லைக்குள்ளாகவே கம்யூனிசச் செம்பயிரை வளர்த்து வருகின்றார்கள்.

Euro Communism ஐரோ—கம்யூனிசம் என்று தனிச் சொல்லிட்டு அழைக்க வேண்டிய அளவு ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிச இயக்கங்கள் தனித்தன்மை பெற்றுத் திகழ்கின்றன.

இந்தியத் துணைக்கண்டத்தில் தி. மு. கழகமே இப்பணியை ஆற்ற வல்லது. தமிழ் நிலத்தில் தமிழின மொழி-நலனை பலிகொடுக்காமல் கம்யூனிசகீதம் பாடும் வானம்பாடியாக கலைஞர் திகழ்கின்றார். எதிர்காலத் Indo-Communism இந்தோ கம்யூனிசம் என்ற ஒரு சொல்லை உருவாக்கும் அளவிற்கு ஏனைய தேசிய இனங்களுக்கிடையே கலைஞருடைய தெள்ளிய உதாரணம் ஒரு அறிவெழுச்சியை நிச்சயம் தோற்றுவிக்கத்தான் போகிறது.

சின்னஞ்சிறு நாடான யுகோஸ்லாவியாவின் எல்லைக் கோடு ஏழு நாடுகளின் எல்லைகளைத் தொட்டுச் செல்கின்றது. இத்தாலி, ஆஸ்திரியா அங்கேரி. ருமேனியா, பல்கேரியா, கிரீஸ், அல்பேனியா என்ற ஏழு நாடுகள் எல்லையில் சூழ்ந்திருப்பதாலே சின்னஞ்சிறு நாடான யுகோஸ்லாவியா பூமிப்பந்திலே ஒரு நாடாக இல்லாமல் கரைந்தா போய்விட்டது.

முப்புறமும் கடலும் முகில் தொடும் இமயமும் எல்லைகளாக இருந்ததாலே சீனா சீறி வராமல் இருந்ததா? பாகிஸ்தான் பகை கக்கிப் பாயாமல் இருந்ததா? எல்லைத் தொல்லை இயற்கையானது.

சின்னஞ்சிறு நாடு சுதந்திரமாக வாழுதல் இயலாது என்பது போலிவாதம் — பொருளற்ற கூப்பாடு.

எதைக் காரணம் காட்டியாவது ஒரு இனத்தின் விடுதலைப் பேருணர்ச்சியைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற கருத்தில் இட்டுக் கட்டப்படும் சொல்லடுக்கு!

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்று பழமொழியே உண்டல்லவா. அதனைப் போன்று கூட்டாட்சியால் கொஞ்சிடும் பலன்களைக்கூறி—ஒருமைப்பாட்டிற்குஉரமிட வேண்டுமே ஒழிய உப்புசப்பில்லாத உதவாக்கரை வாதங்களை துணைக்கு அழைக்கக்கூடாது.

யுகோஸ்லாவியாவின் 22 மில்லியன் மக்கட் தொகையில் பல்வேறு தேசிய இனங்கள் உள்ளடங்கி இருக்கின்கின்றன. செர்ப்வ் (Serbp), கிரோட்ஸ் (Croohs), முஸ்லீம்கள், சுலோவனீஸ் (Slovenes). அல்பேனியர்கள், மாசிடோனியர்கள் (Macidonians), மோன்டினேகிரின்ஸ் (Montencgins) அங்கேரியர்கள், ஆஸ்திரியர்கள் துருக்கியர்கள் மற்றும் 16 தேசிய இனங்கள் சின்னஞ்சிறு யுகோஸ்லாவிய நாட்டைத் தாயகமாக ஏற்றுக்கொண்டு வாழ்கின்றன. இத்தனை தேசிய இனங்கள் வாழுகின்ற அந்த நாட்டில் — இருபது மில்லியன் மக்களுக்கு மேலாக வசிக்கிற அந்த நாட்டில் யுகோஸ்லாவியர்கள் எத்தனை பேர் தெரியுமா?

இரண்டு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரம் பேர்தான், மக்கள் தொகை கணக்கெடுப்பில் தங்களை யுகோஸ்லாவியர்களாக பதிவு செய்து கொண்டுள்ளனர். அரசாங்கமே இல்லாமல் இத்தாலியும் இயங்க முடியும் — யுகோஸ்லாவியர்களே இல்லாமல் யுகோஸ்லாவிய நாடும் இருக்க முடியும் என்றுகூட வேடிக்கையாகச் சொல்லப்படுவதுண்டாம்.

இந்தியர்களே இல்லாமல் ஏன் இந்தியா இருக்கக் கூடாது. வங்காளியராகவும், தமிழராகவும், மராத்தியராகவும் ஏன் ஒவ்வொரு தேசிய இனமும் பெருமையோடு தன்னை அழைத்துக் கொள்ளக் கூடாது?

அறுபது கோடி மக்கள் தொகையில் ஆறேழு இலட்சம் பேர் இந்தியர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளட்டுமே!

ஒவ்வொரு தேசிய இனமும் உரிமையோடு ஒன்றாக சின்னஞ்சிறு யுகோஸ்லாவியாவில் வாழ்வதுபோல் பரந்த இந்த நாட்டில் ஏன் வாழக் கூடாது?

தேசிய இனங்களின் பட்டியலை தேசியகீதம் தெரிவிக்கும் போது ஏன் ஒவ்வொரு தேசிய இனமும் தத்தமது சொந்தப் பெயரைச் சொல்லி மகிழக் கூடாது?

நான்தான் திராவிடன் என்று நவில்கையில் தேன் தான் நாவெலாம் வான் தான் என்புகழ் என்று புரட்சிக்கவிஞர் பூரித்து முழங்குவாரே — அப்படி முழங்கும் உரிமை ஏன் தமிழனுக்கு

(10-ம் பக்கம் பார்க்க)

அதிகாரவர்க்கத்திற்கு ஆடம்பரச் செலவா?

மூன்று கோடியே முப்பத்து இரண்டு இலட்ச ரூபாய்க்குமேல் மத்திய அரசு தனது நிர்வாகத்தில் உள்ள நிறுவனங்களின் அலுவலகங்களுக்குச் செலவழித்துள்ளது.

இரும்பு உற்பத்தி திட்டமிடும் நிலையில் உள்ள சேலம் இரும்பாலை அலுவலகங்களுக்கு ஒரு சதுர அடிக்கு நூற்று ஐம்பத்து இரண்டு ரூபாய்வீதம் அளவுக்கு மீறி அழகு படுத்தவும், மேசை நாற்காலி போன்றவற்றிற்கும் வீண் விரயம் செய்துள்ளது.

இதைப் போன்றே பால்மர் லாரி (Balmer Lawarie) என்ற நிறுவனத்திற்கு ஒரு சதுர அடிக்கு அறுபத்து எட்டு ரூபாயும்,இந்துஸ்தான் ஆண்ட்டி பயாட்டிக்ஸ் என்ற நிறுவனத்திற்கு ஒரு சதுரஅடிக்கு அறுபத்துஏழு ரூபாயும் என்ற கணக்கில் பணம் தண்ணீர்போல் இரைக்கப்பட்டிருக்கின்றது.

மொகலாய மன்னர்களின் தர்பார் முறையில் அதிகாரவர்க்கம் ஆனந்தமாக பொழுதுபோக்குகின்றது. அதே நேரத்தில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் குருதியை வியர்வையாய்ச் சிந்தி பூமிக்கு அடியில் ஆபத்து நிறைந்த நிலக்கரிச் சுரங்கத்தில் எவ்வித பாதுகாப்பும் இன்றி நாளெல்லாம் கடுமையாய் உழைக்கிறார்கள்.

1977ஆம் ஆண்டில் சுரங்கத் தொழிலாளர்கள் 186 பேர் மடிந்திருக்கிறார்கள். 1976ஆம் ஆண்டில் 237 பேர்களும் 1975ஆம் ஆண்டில் 237 பேர்களும் சுரங்கங்களில் மடிந்திருக்கிறார்கள். அதுமட்டுமன்றி குறைந்தது ஆயிரம் சுரங்கத் தொழிலாளிகளாவது ஆண்டுதோறும் பயங்கர விபத்துக்குள்ளாகிறார்கள்.

"கோல் இந்தியா" நிறுவனம் முதன்முறையாக தன்னுடைய வரவு-செலவு திட்டத்தில் ஐந்து கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி தொழிலாளர் பாதுகாப்புக்கு என்று திட்டம் தீட்டி வருகிறதாம்.

எட்டுத் திக்கிலும்..!

இலஞ்சத்தில் திளைக்கும் ஹாங்காங் காவலர்கள் :-

உலகத்தின் உல்லாச நகர்களில் ஒன்றான ஹாங்காங்கில் என்று மில்லாத அளவுக்கு இன்று விபச்சாரம், சூதாட்டம், தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களின் விற்பனை ஆகியவை அதிகரித்து வருகின்றனவாம்.

காரணம், குற்றங்களைக் களைய வேண்டிய காவலர்களே இலஞ்சமாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு அத்தீமைகளுக்குத் துணை நிற்கிறார்களாம்.

கிழக்காசியாவிலேயே, அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி, அதிகமாக இலஞ்சம் வாங்குபவர்கள் ஹாங்காங் காவல் துறையினர் தான் என்று சொல்லப்படுகிறது.

1974-ஆம் ஆண்டு காவல் துறையினர் செய்த ஊழல்களைக் கண்டறிய அரசு ஒரு விசாரணைக் குழுவை அமைத்த போது ஏறத்தாழ 37,000 குற்றச்சாட்டு மனுக்கள் வந்தன.

அதைத் தொடர்ந்து ஆண்டு தோறும் விசாரணைக் குழுவை அரசு நியமித்துக் கொண்டே வருகிறது மேலும் காவல் துறையில் 'களை எடுக்க' பிரிட்டிஷ் காவல் துறையினரின் உதவியைக் கோரியுள்ளது ஹாங்காங் அரசு.

இத்தாலியில் அதிகரித்து வரும் குற்றங்கள்

உலகச் சுற்றுப் பயணம் செய்பவர்கள் இத்தாலியைக் காணத் தவறுவதில்லை பழம் பெரும் நாகரிகத்தின் பெருமையை விளக்கும் வரலாற்றுச் சின்னங்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் இந்நாட்டில் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. ஆண்டு தோறும் முப்பது இலட்சம் கொள்ளைகளும் திருட்டுகளும் நடப்பதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது!

வருகின்ற சுற்றுலாப் பயணிகளே பெரும்பாலும் இவைகளுக்குப் பலியாகின்றனர்.

கடந்த ஆண்டு ரோம் நகரில் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட அமெரிக்கர்கள் பொருள்களைப் பறிகொடுத்தனர் என்ற செய்தியை 'லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்' என்ற பத்திரிகை வெளியிட்டது.

ஜாகீர்

தேவைக்கு அதிகமாக எதையும் எடுத்து வராதீர்" —இது, சுற்றுலாப் பயணிகளுக்கு அமெரிக்கத் தூதரகம் விடுத்து வரும் ஒரு எச்சரிக்கை!

முதுமையில் பாதுகாப்பு

ஒவ்வொரு சோவியத் குடிமகனும் முதுமைப் பருவத்தில் பராமரிக்கப் படுவதற்கான உரிமை பெற்றுள்ளார். ஆண்களுடைய ஒய்வு பெறும் வயது அறுபது; பெண்களுடைய ஒய்வு பெறும் வயது ஐம்பத்தைந்து. சில தொழில்களில் ஆண்களுடைய ஓய்வுபெறும் வயது ஐம்பது; பெண்களுடைய ஓய்வுபெறும் வயது நாற்பத்தைந்து.

அவர்களுடைய முதுமைக் காலத்தில் பழைய சம்பளத்தில் ஐம்பது சதவீதத்திலிருந்து நூறு சதவீதம்வரை ஒய்வூதியமாகத் தரப்படுகிறது. ஒய்வூதியம் அரசாங்கச் செலவிலேயே முழுதும் அளிக்கப் படுகிறது. இதற்காக வேண்டி ஊதியங்களில் எத்தகைய பிடித்தமும் செய்யப்படுவதில்லை.

சோவியத்தில் இறக்கப்பட்ட தென் கொரிய விமானம்

நூற்றுப் பதின்மூன்று பயணிகள் இருந்த தென் கொரிய விமானம் ஒன்று காணமல் போனது. அது எங்கே யாரால் இறக்கப்பட்டது என்று தெரியாமலிருந்தது

அந்த விமானம் சோவியத்தில் இறக்கப்பட்டுள்ளது என்று இப்போது தெரிய வந்துள்ளது.

வேவு பார்க்கும் எண்ணத்தோடு அத்துமீறி தன் பகுதியில் பறந்ததற்காக அந்த விமானம் இறக்கப்பட்டுள்ளது என்று சோவியத்கூறியுள்ளது.

'அசந்தர்ப்பமாக ஏற்பட்ட தவறு... வேவு பார்க்கும் எண்ணம் இல்லை' என்று தென் கொரியா கூறுகிறது.

ஆனால்-

அந்த விமானம் சோவியத் பகுதியின் மீது பறந்தபோது இரண்டு சோவியத் போர் விமானங்கள் அதை மறித்து அருகிலிருக்கும் திடலில் இறங்கும்படி கட்டளையிட்டன

தென்கொரிய விமானம் அக் கட்டளைக்குப் பணிய மறுத்தபோது, சோவியத் விமானங்கள் அதை கட்டாயப் படுத்தி இறங்க வைத்தன.

இதனால் இரண்டு பேர்கள் மாண்டனர். இரண்டு பேர்கள் படுகாயமடைந்தனர்.

தென்கொரிய விமானங்களையும், பயணிகளையும் அவர்கள் நாட்டுக்குப் பத்திரமாக அனுப்பி வைக்கப்போவதாக சோவியத் உறுதியளித்துள்ளது.

அமெரிக்காவிலும் உழவர்களின் போர்!

உழவுப் பண்டங்களின் கொள்முதல் விலையை அரசு மிகவும்குறைத்ததை எதிர்த்து அமெரிக்க உழவர்கள் புது வகையான போராட்டம் நடத்தினர்கள்.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் முன்னல் தங்களுடைய ஆடுகளையும், கோழிக் குஞ்சுகளையும், கழுதைகளையும் அவிழ்த்துவிட்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

பிரெஞ்சில் கைதாகும் அயல் நாட்டவர்!

அங்கீகாரம் பெறாது பிரெஞ்சு நாட்டில் வாழ்ந்து வரும் அயல் நாட்டார்களைக் காவலர்கள் இப்போது தீவிரமாக கைது செய்து வருகிறார்கள்; பிரெஞ்சில் வேலை இல்லாத் திண்டாட்டம் பெருகி வருவதால், அனுமதி பெறாமல் அங்கு வேலைசெய்யும் அயல் நாட்டவரை அரசு அப்புறப்படுத்துவதில் கவனமாக இருக்கிறது.

பிரெஞ்சுக்காரரின் சாயலை முழுக்க முழுக்கப் பெற்றிருந்த எல்லாரையுமே காவலர்கள் கைது செய்கிறார்கள். அண்மையில் ரயில்கள், டர்தாள ரயில்கள், பேருந்துகள் ஆகியவற்றில் இருந்த பலரைக் காவலர்கள் கைது செய்தார்கள். அவர்கள் போர்த்துக்கீசியர்கள், அரா்பியர்கள், துருக்கியர்கள், ஸ்பானியர்கள் போலத் தோற்றமளித்தாலும் உண்மையில் பிரெஞ்சுகாரர்களாகவே இருந்ததால் காவலர்கள் ஏமாற்றத்திற்கு ஆளானார்கள்.

தெரியாது மகனே!

" அப்பா..."

" சொல்லு மகனே..."

" மத்திய அமைச்சர் ராஜ்நாராயணன் தினமும் சிறுநீர் குடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தாராமே"

" அப்படித்தான் அவர் சொன்னராம், மகனே..."

" இப்போது விட்டுவிட்டாரராமே";

" ஆமாம், மகனே..."

" காரணம் என்னப்பா?"

" நேரம் கிடைக்க வில்லையாம் மகனே...?"

" எதற்கப்பா நேரம் கிடைக்கவில்லை — சிறுநீர் கழிக்கவா? அதை அருந்தவா?"

" எனக்குத் தெரியாது மகனே..."

நல்லாட்சி மலர.....

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

தரப்படக் கூடாது? ஏன் வங்காளிக்கு வழங்கப்படக் கூடாது? ஏன் குசராத்திற்கு கொடுக்கப்படக்கூடாது?

ஒருமைப்பாடு உண்மையில் மலர்வது தேசிய இனங்களின் தனி உரிமைகளை கல்லறைக்கு அனுப்பிய பின்பு அல்ல!

பூண்டோடு உரிமைகளை வேரறுத்துவிட்டுத்தான் புது நாட்டை உருவாக்க முடியும் என்றால் அது பொருளற்ற ஏற்பாடாக முடியும். தீதும் நன்றும் பிறர் தரவாரா — என்று என்றோ ஒரு தமிழ்க் கவிஞன் எழுதிச் சென்றதைத் தான் இங்கே நினைவூட்ட முடியும்.

இராபர்ட் ஹார்வெட் என்ற அறிஞர் சோவியத் நாட்டைப்பற்றி சொன்ன சொல்லையும் இங்கே நினைவூட்டுதல் அவசியமாகிறது.

தேசிய இனங்களின் பிரச்சினை பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய சோவியத் நாட்டில் புதைக்கப்பட்ட வெடிகுண்டிற்குச் சமமாகும் என்று அவர் எழுதுகின்றார்.

காலம் குறித்தபடி வெடிக்கக்கூடிய குண்டு காலடி மண்ணிற்குக் கீழே இருக்கிறது. தேசிய இனங்களின் தனி உரிமை மறுக்கப்பட்டால் — சோவியத் நாட்டிலேகூட வெடிகுண்டு வெடிக்கும்.

பூகம்பம் ஏற்படும்!

ஆண்ட இனம் அடங்கி ஒடுங்கி ஆமைகளாய் ஊமைகளாய் ஆண்டாண்டு காலம் இருந்திடுதல் இயலாது. கொடி கட்டி ஆண்டவர்கள் கைகட்டி வாய் பொத்தி காலமெல்லாம இருந்திடுவர் என்றெண்ணக் கூடாது. வையம் ஆண்ட வண்டமிழ் மரபை வந்தேறி ஆளலாம். ஆனல் வரலாற்றை மறந்து மயக்கத்திலேயே வாளுள் எல்லாம் தமிழினம் இருக்கும் என்று தப்புக் கணக்குப் போடக் கூடாது

மொழியுரிமை இழந்து மூங்கையராய் முடங்கிக் கிடப்பர்-முத்தமிழர் என்றென்றும் அடங்கிக்கிடப்பர் என்றெண்ணும் ஏமாளித்தன்மை ஆள்வோர்க்கு இருத்தல் கூடாது.

சுரண்டிப் பிழைப்பதிலே சுகம் கண்டவர்கள் உரிமைகளைக் கொடுப்பதற்கு ஒப்ப மாட்டார்கள் என்பது உண்மைதான். ஆனல் உரிமைகளைத் தந்தால் ஒழிய — ஒருமைப்பாடு இல்லை என்ற உலக வரலாற்று உண்மையை அவர்கள் உணர்ந்தாக வேண்டும்.

கூட்டாட்சி கொடுத்தால் தான் கூடி வாழ ஏனைய தேசிய இனங்கள் இணங்கும் என்பதனை புரிந்து கொள்ள வேண்டியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்! இரண்டாவது சுதந்திரப் போரை வெற்றிகரமாக நடாத்திய கலைஞர் கூட்டாட்சிக்காக குரல் கொடுக்கிறார் என்பதனை நினைவில் கொண்டாக வேண்டும்.

வெற்றி மயக்கத்தில்-அதிகார போதையில்-தத்தமது சொந்தச் சிக்கல்களை அறுத்து விட்டு காணும் சுகத்தில்-கூட நின்று கொடுமைக்காளான கொள்கைத் தங்கங்கள் இன்றளவும் குற்றக் கூண்டில் நிறுத்தப்பட்டுள்ள கொடுமைக்கு முடிவு கட்ட நினைப்பில்லாமல் நேரமில்லாமல்— மாநில சுயாட்சியை மறுத்துக் கொண்டு—உரிமைகளை தந்திட ஒப்பிடாது—மொழி பாதிக்கும் போக்கில் மனம் மகிழ்வார்களேயானல் தமிழ்த் தேசிய இனத்தின் எழுச்சி கலைஞரின் சுட்டு விரல் அசைவில் இருக்கிறது என்பதனை உணர வேண்டியோர் உணர்ந்தாக வேண்டும்.

முப்பெரும் தத்துவ மோதிரங்கள்!



மேற்படி மோதிரங்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. பல ஆண்டுகள் உழைக்கக் கூடிய ஒரு மோதிரம் விலை ரூ. 15. தபால் செலவு தனி. உங்களுக்கு தேவையான மோதிரத்தைக் குறிப்பிட்டு உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து, ரூ. 3 அட்வான்சுடன் அனுப்பினால், மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் மோதிரத்தை V. P. P மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர் : சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் சிறந்த விளம்பரத்தில் தேசிய பெற்றுக்கொள்ளலாம்.
"போட்டோ வீனஸ்" 104, C.N.K ரோட், சென்னை-600 005.
PHOTOGRAPHERS (ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

வேண்டாம் இந்தச் சித்திரவதை

"சட்டசபைக்கு வா என்ருர்கள் — சென்றேன் — என்ன செய்துவிட்டார்கள்?"

—இந்தப் பொன்மொழியை உதிர்த்திருப்பவர் வேறு எவருமல்ல — 'தவத்திரு — மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். தான்.

சட்டசபையும்—மேல்சபையும் ஏறத்தாழ நாற்பது நாட்கள் தொடர்ந்து நடந்தது. பல்வேறு பிரச்சினைகள்— திட்டங்கள் அப்பொழுது அலசி ஆராயப்பட்டன,

சட்டமன்றக் கூட்டம் ஒரு மணி நேரம் இயங்க ஆகும் செலவு 3500 ருபாய் என்ற டள்ளிவிவரத்தையும் அள்ளி வீசிய பொருளாதார மேதை இதே முதல்வர் எம், ஜி. ஆர். தான்!

நாம் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே அம்மகானுபாவரை ஒன்று கேட்க ஆசைப்படுகிருேம்,

ஐயா! பெரியவரே!

மாண்புமிகு முதல்வரே!

நாற்பது நாட்கள் நடந்து முடிந்த சட்டமன்றக் கூட்டத்தொடருக்கு பொறுப்புணர்ச்சியுடன், கடமைஉணர்ச்சியுடன் நீங்கள் எத்தனை நாள் நிகழ்ச்சிகளில் — விவாதங்களில் கலந்து கொண்டீர்கள்? மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு உறுப்பினர்களால் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு — முத்தானவாய் திறந்து முதல்வர் என்ற முறையில் தாங்கள் செய்தது என்ன?

குறிப்பாகவும் - சிறப்பாகவும் முதலமைச்சர் துறை தொடர்பான கேள்விகள் சபையில் இடம்பெற்றபோது — எந்த அளவுக்குத் தாங்கள் பதில் தந்தீர்என்பதைத்தொடர்ந்து ஏடுகளைப் படித்து வந்தோருக்கு எளிதில் புரிந்து போயிருக்கும்.

சட்டப் பேரவைக்கும் தொடர்ச்சியாக வருவது வது கிடையாது. மேலவைக்கும் பொறுப்புணர்வுடன் போனது இல்லை.

இக்கட்டான இந்தச் சந்தர்ப்பங்களில் முதலமைச்சர் தொடர்புடைய கேள்விகளுக்குப் பதில் தருவது யார்? என்ற பிரச்சினைகளை எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் எழுப்பியபோதெல்லாம என்ன தான் பதில் கிடைத்தது?

"முதலமைச்சருக்கு எண்ணற்ற அலுவல்கள்— நாங்கள் இல்லையா?'

அமைச்சரவை என்பது கூட்டுப் பொறுப்பு அல்லவா? எனவே "நாங்கள் பதில் தருகிருேம் 'என்று அவர் தம் சக அமைச்சர்கள் ஏளனமாகவும் ஏகடியமாகவும் எகிறிக் குதித்துப் பதிலளித்த பாங்கினை அதற்குள்ளாகவா இந்த நாட்டு மக்கள் மறந்து போயிருப்பார்கள்?

"மேல்சபைக்கு மாண்புமிகு முதல்வர் ஏன் வருவதே கிடையாது? இந்த மாமன்றத்தை மதிக்கும் முறை இதுதானு?' என்று பிரதான எதிர்க்கட்சியாகிய தி மு க. உறுப்பினர்கள் பலமுறை கேட்டார்கள்.

சலவை

பா. வரதன்

அதுமட்டுமல்ல! மேல் சபைக் கூட்டங்களுக்கு தொடர்ந்து முதல்வர் வராமலிருட்பதைச் சுட்டிக்காட்டி எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தங்களது அதிருப்தியைவெளிப்படுத்தும் முறையில் வெளிநடப்புக்கூட செய்தார்கள். அப்பொழுதும் மாண்புமிகு முதல்வர் சபைக்கு வந்தாரா என்ருல் அதுதான் இல்லை.

இருந்தபோதிலும் மிகவும் துணிச்சலாகவும்—தைரியமாகவும் — ஆணவமாகவும் அவர் கூறுகிருர், சட்டசபைக்கு வந்தேன். என்ன செய்துவிட்டார்கள்' என்று கன்னல் சாறு பிழிந்தெடுத்தாற் போன்ற கனிவு மிகுந்த கருத்தாழம் பொருந்திய கவிதைவரிகளில் அடுக்கடுக்காக ஆயிரம் பிரச்சினைகளைப் பற்றி கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் சட்டப்பேரவையில் சங்கநாதம் செய்தாரே! சிம்மக்குரல் கொடுத்து சிலிர்க்க வைத்தாரே!

சங்கீத வீணை போல் சரசமிடும் செந்தமிழுக்குச் சொந்தக்காரரான தி. மு. கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் தித்திக்கும் தேன் தமிழால்- கேட்டாரைப் 'பிணிக்கும் வகையிலும்—கேளாரை ஈர்க்கின்ற பான்மையிலும் வளமான கருத்துணர்வுகளை-நாட்டுக்கு நலம் தரும் சிந்தனைகளை சட்டமன்றத்தில் முழக்கம் செய்தாரே?

முதல்வராகிய நீங்கள் கடமை உணர்வுடன் அனுதினமும் சட்டமன்றக் கூட்டத்திற்கு வந்திருந்தால் அல்லவா இந்த நிலையும்—நினைப்பும் உங்களுக்கு தெள்ளென விளங்கும்? அவ்விதமே மேல் சபைக் கூட்டத்திலும் மாண்புமிகு உறுப்பினர்கள் — மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய எங்கள் முதல்வர் இந்த சபைக்கு வர மாட்டாரா? வந்து எங்கள் கேள்விகளுக்கு பதில் தரமாட்டாரா?' என்று ஏங்கிக் கிடந்தார்கள். இவ்விதம் திரும்பத் திரும்ப பல நாட்கள் தொடர்ந்து கேட்கப்பட்ட பிறகு "முதல்வருக்கு உடல் நலமில்லை" என்று அந்த பதில் அளிக்கப்பட்டது.

அண்ணா பெயரால் கட்சி ஆரம்பித்து—அவர்தம் அடிச்சுவட்டைப் பின்பற்றி வெற்றி புரி நோக்கி வீர நடை போடுவதாக வீராப்புப் பேசும் இந்த வீராதி வீரர்கள்—பொறுப்பும் சிறப்பும் மிக்க சட்டமன்றத்தை மதிக்கும் இலட்சணம் இதுதான் என்பதை அறிந்த நடு நிலைபாளர்கள் மனம் நொந்து கொதித்துப் போகவில்லையா?

தி. மு. க. தலைமை நிலையச் செயலாளரும் — மேலவை உறுப்பினரும் — ஆற்றல் மிகு வீரருமான ஆற்காடு வீராசாமி அவர்கள் "முதல்வர் அவர்கள் இந்த மன்றத்திற்கு ஏன் வருவது கிடையாது?" என்று உறுதியுடன் அறுதியிட்டுக் கேட்டுள்ளாரே.

இப்படி இரண்டு சபைகளின் நிகழ்ச்சிகளிலும் பொறுப்புடன் சென்று நிகழ்ச்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாத முதல்வர்தான்— மே தின பொதுக் கூட்டத்தில் 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற முறையில் சட்டசபைக்குச் சென்றேன் என்னசெய்து விட்டார்கள் என்று வாய்ச் சவடால் விடுத்துள்ளார்.

"மாற்ருன் வீட்டுத் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று சொன்னவர் தான் மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள். அவர் பெயரால் கட்சி ஆரம்பித்து நடத்துகிறவர்களோ எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கூறும் கருத்துக்களையே காது கொடுத்துக் கேட்கத் தயாராக இல்லை என்பதைத் தானே மேற்கூறிய நிகழ்ச்சிகள் நிருபித்துக் காட்டுகின்றன.

உழைப்பின் உயர்வு குறித்தும் தொழிலாளர்களின் கடமை குறித்தும்— கருத்து விளக்கம் தர வேண்டிய அந்த விழாவில் முதல்வர் இராமச்திரன் கழகத் தலைவர் கலைஞர் அவர்களைப்பற்றி அவதூருக அர்ச்சனைகள் பொழிவதிலேயே பெரும் பகுதி நேரத்தைச் செலவிட்டதாக செய்தி இதழ்கள் கூறுகின்றன.

இடம்— பொருள் ஏவல் எதுவும் கருதாது — எங்கு எது பேச வேண்டும் — என்ன பேச வேண்டும் என்ற வரையறைகூட வகுத்துகொள்ளாததால்தான் தமிழக சட்டமன்ற நிகழ்ச்சிகளில் அடிக்கடி உறுப்பினர்களின் பேச்சுக்களை சபைக் குறிப்பிலிருந்து நீக்குவதும் சர்வ சாதாரண சம்பவமாகிவிட்டது.

ஆளும் கட்சியை அலங்கரிக்கும் அமைச்சர் பெருமக்கள் மட்டுமல்ல — ஆளுங் கட்சியின் மூலவருமான முதல்வர் பேசிய பேச்சுக்கேகூட இந்தப் பரிதாபநிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால் ஜனநாயகம் சீரழிவை நோக்கி வேக வேகமாகச் சென்று கொண்டிருப்பது தெளிவாகப் புலனுகிறது.

தமிழகச் சட்டசபை சரித்திரம் படைத்த ஒப்பற்ற தலைவர்களான மூதறிஞர் ராஜாஜி—பேரறிஞர் அண்ணு —ஆந்திர கேசரி பிரகாசம்— பெருந்தலைவர் காமராசர் — தமிழினத் தலைவர் கலைஞர் போன்ற மேதைகள் அமர்ந்து ஆட்சி செலுத்திய இடம் என்று எண்ணும்போது ஏற்படுகிற மரியாதை — பாச உணர்வு — எம். ஜி ஆர். என்கிறபோது பட்டுப் போகிறது—பறந்து போகிறது!

ஒரு நேரத்தில் சட்டசபையே செத்துவிட்டது என்று கூறிய எம், ஜி. ஆர். சட்டசபைக்கு வந்தால். சட்டசபை உயிர்பெற்று முன்னிலும் பெருமை பெற்று விளங்கும் என்று நம்பித்தான் மக்கள் அவருக்கு ஓட்டளித்து சட்டசபையில் உட்கார வைத்தார்கள் ஆனுல், அவரோ சட்டசபையையும் ஜனநாயகத்தையும் சித்திர வதைக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிருர். அந்தோ தமிழ் நாடே! உனக்கு விடிவு காலம் எப்போது?

★★★★★★★★★★★★

பொருளாளர் சாதிக் இல்லத் திருமணங்கள்

கழகப் பொருளாளர் சாதிக் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்த எம். நியாஸ் அலி (தொலைபேசி துறை) எச் மலிகா பேகம். டி, எஸ். ஜகாங்கிர் (குடிசை மாற்று வாரியம்) எம. குல்ஜர் பேகம் ஆகியோர் திருமணம் கடந்த 1—5—78 அன்று சென்னை ராணி அண்ணுநகர் சமூகக் கூடத்தில் தலைவர் கலைஞர் தலைமையிலும் பொதுச் செயலாளர் பேராசிரியர் முன்னிலையிலும் நடைபெற்றது. கழக முன்னணித் தோழர்கள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு வாழ்த்தினர்.

தலைமை தாங்கிய கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களுக்கும், நேரில் வந்திருந்தும் அஞ்சல் தந்திமூலமும் வாழ்த்திய அனைவருக்கும் மதுராந்தகம் தீன் சகோதரர்கள் சார்பில் நன்றி தெரிவிக்கப்படுகிறது.

★★★★★★ ★★★★★

★★★★★-★★★★★★

நம் நாடு

புதிய சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25.00

ஆறுமாத சந்தா ரூ. 12-50

மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நிர்வாகி,

நம் நாடு,

அன்பகம், சென்னை-600013

★★★★★★★-★★★★

பம்பாயில் 'இரத்தத்தின் இரத்தம்' பட்டபாடு!

பம்பாயிலிருந்து வெளிவரும் 'பிலிம் பேர்' என்ற திரைப்பட இதழ் ஆண்டு தோறும் ஒவ்வொரு மொழியிலும், சிறந்த திரைப்பட நடிகர், நடிகையர், தொழில் நுணுக்க நிபுணர் ஆகியோருக்குப் பரிசளிப்பது வழக்கம்.

கடந்த ஆண்டின் சிறந்த நடிகர், நடிகையருக்குப் பரிசளிக்கும் விழா இம்மாதம் நடந்தது.. அதில் முதலமைச்சர் எம். ஜி. ஆரும் கலந்து கொண்டார்.

"இரத்தத்தின் இரத்தமே..." என்று 'மழலைத்' தமிழில் அவர் 'பழைய ரிக்கார்டை'ப்போல் பேச ஆரம்பித்ததும், மொழி பெயர்க்க வந்த சித்ரா கிருஷ்ணசாமி அந்த வார்த்தைகளை எப்படி மொழி பெயர்ப்பது என அறியாது-திரு திருவென்று விழிக்க ஆரம்பித்து விட்டாராம்.

பிறகு எப்படியோ சமாளித்துக் கொண்டு 'பிளட் பார் பிளட்' என்று மொழி பெயர்த்ததும் அரங்கத்திலிருந்த அனைவரும் 'கொல்'லென்று சிரிக்க ஆரம்பித்து விட்டார்களாம்!

மேலும்-

முதலமைச்சர் 'மனப் பாடம்' செய்துகொண்டு வந்த 'வசனங்களை'ப் பேச விடாது விழாவிற்கு வந்திருந்தவர்கள் தடுத்து விட்டார்கள.

"வள வளா...கொழ...கொழாப்...பேச்செல்லாம் இங்கு வேண்டாம் . . ."

என்று கூறி அவர்கள் கூச்சலிடவே, முதலமைச்சர் தம் பேச்சைச் 'சட்' டென்று முடித்துக் கொண்டாராம்.

அரசினர் போக்கைக் கண்டித்து போக்குவரத்துத் தொழிலாளர்களின் போர்க்குரல்!

போக்குவரத்துத் தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கைகளுக்காக 1977 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற போராட்டத்திற்குப் பின்னர் 3—9—77-ம் நாளன்று போக்குவரத்து அமைச்சர் முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி 27 ரூபாய் இடைக்கால உயர்வுத் தொகை தருவதாகவும்; ஊதிய உயர்வு உள்ளிட்ட ஏனைய பொதுக் கோரிக்கைகளின் மீது 31—3—1978-ம் நாளுக்குள்ளாக இறுதியான முடிவு காண்பதாகவும் முத்தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பந்தம் கையெழுத்துச் செய்யப்பட்ட 1977 செப்டம்பர் மூன்றும் தேதியன்று தொழிலாளர் உடனடியாக வேலை நிறுத்தத்தைக் கைவிட வேண்டுமென்றும்; மறுநாள் முதலாகவே தாங்கள் பொதுக் கோரிக்கைகளின் மீதான பேச்சு வார்த்தைக்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

ஆனால் எந்தெந்தப் பொதுக் கோரிக்கைகளின் மீது நேரிடைப் பேச்சு வார்த்தை நடத்துவது என்பதுபற்றி தொழிற் சங்கத்தினருடன் கலந்து பேசி முடிவு செய்வதாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த சரத்தினைச் சிறிது கூடப் பொருட்படுத்தாமல், மிக மிக அசட்டையான போக்கினை அரசாங்கம் கையாண்ட காரணத்தால் 1978 மார்ச் வரை ஏழு மாத காலமும் காலதாமதப்படுத்தப்பட்டது.

அநியாயமான அணுகுமுறை

தொழிலாளர்களது தொடர்ந்த வற்புறுத்தல்கள் நடவடிக்கைகள் காரணமாக நீண்ட காலத் தாமதத்திற்குப் பின்னர் துவங்கப்பட்ட நேரிடைப் பேச்சு வார்த்தையிலும் நிர்வாகத்தினர் நியாயமான அணுகுமுறையினைக் கடைப்பிடிக்கவில்லை.

நேரிடைப் பேச்சு வார்த்தையின்போது நிர்வாகத் தரப்பினர் ஏற்கனவே தரப்பட்ட 27 ரூபாய் உயர்வுடன் மேற்கொண்டும் 21 ரூபாய் சேர்த்து 48 ரூபாய் உயர்வு தருவதாக அறிவித்தார்கள். இதர அலவன்ஸ்கள் என்கிற இனத்தில் இந்த உயர்வினைப் பொருத்துவதாக இருந்தால் ரூ 48 உயர்வு தரப்படும் என்றும் அடிப்படைச் சம்பளம்—பஞ்சப்படி ஆகிய இனங்களில் இந்த உயர்வினைப் பொருத்துவதாக இருந்தால் இந்த உயர்வு காரணமாக நிர்வாகத் தரப்பினர் செலுத்த வேண்டிய—போனஸ் — கிராஜுவடி — பிராவிடெண்ட் பண்ட்' போன்றவைகளுக்கான தொகை குறைத்துக்கொள்ளப்படும் என்றும் அறிவித்தனர்.

மிகக் குறைந்த ஊதிய நிலவரத்திலும், ஏற்கெனவே இருந்து வந்த சலுகைகள் கூடப் பறிக்கப்பட்ட நிலையிலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள போக்குவரத்துத் தொழிலாளிகட்கு நிர்வாகத் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ள சிறு உயர்வு போதுமானதல்ல என்று அனைத்துத் தொழிலாளர்களாலும் தெரிவிக்கப்பட்டுவிட்டது.

சமரசப் பேசசு வார்த்தைகளில் சராசரி நிர்வாகத்தனர் கையாளுகிற அடிப்படை நடைமுறையினைக்கூட போக்குவரத்து நிர்வாகம் செயல்படுத்த மறுத்துவிட்டது. தொழிலாளர் தரப்புக் கோரிக்கைகளின் மீது நிர்வாகத்தினர் பதிலுரைகளை கொடுத்திடவும் மறுத்தனர்.

நிர்வாகத்தின் ஆணவப் போக்கு:

ஒப்பந்தப்படி 31—3—78 ம் நாளுக்குள்ளாக தீர்வு காணாதது மட்டுமின்றி மேற்கொண்டும் தொடர்ந்து காலதாமதம் செய்கிற போக்கினை அரசாங்கமும் நிர்வாகமும் கடைப்பிடித்தன

பொது மக்களுக்குத் தொல்லைகள் ஏற்படக்கூடாதென்றும்: பேச்சுவார்த்தைகளின் மூலமே சுமுகமான முடிவுகளைக் காண வேண்டுமென்றும் தொழிற்சங்கங்கள் கையாண்ட அமைதியான நடைமுறைகளை அரசாங்கம் தவறாகக் கணக்கிலெடுத்துக் கொண்டது. தொழிலாளர்களை அச்சுறுத்தியும், மிரட்டியும் பிளவுபடுத்தியும், அடக்கிவிட வேண்டுமென்கிற நடைமுறைகளை அரசாங்கம் கடைப்பிடித்தது சட்ட பூர்வச் சமரசப் பேச்சு வார்த்தைகளைக் கேலிக்குரியதாக்குகிற வகையில் அரசாங்க அறிவிப்புகள் வெளியாயின. ஏற்கனவே நேரிடைப் பேச்சு வார்த்தையில் ஒப்புக்கொண்டதைக் கூட சமரசப் பேச்சு வார்த்தைகளில் நிர்வாகம் மறுத்து விட்டது.

ஏன் இந்த வேலை நிறுத்தம்?

போக்குவரத்து நிர்வாகம் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிற அடம் பிடிக்கும் பிடிவாதப் போக்கும்; அரசாங்கத்தின் தொழிலாளர் விரோதப் போக்கும்: தொழிலாளர்கள் அனைவரும் வேலை நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்த நிலைமைக்குத் தள்ளிவிட்டது.

இந்த நிலைமையிலும்கூட பிரச்சினைகளுக்குச் சுமுகமாக தீர்வு காணுவது எப்படி என்று எண்ணாமல்: போராட்டத்தை எப்படி உடைப்பது என்கிற பணிகளுக்கு அரசாங்கமும். நிர்வாகமும் தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அனைத்துப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களும் ஓரணி சேர்ந்திடக் கூடாதென்கிற பிரித்தாளும் சூழ்ச்சிகளை அரசாங்கமும், போக்குவரத்து நிர்வாகமும் கடந்த சில தினங்களாக மேற்கொண்டுள்ளன

எனவே. தொழிலாளர்களது நியாயயமான கோரிக்கைகள் நிறைவேறிடத் தக்கவகையில்; தமிழக முழுவதுமுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் பணியாற்றுகிற நாற்பத்துமூன்றுயிரம் தொழிலாளர்களும் 16—5—78 நள்ளிரவு 12. மணிக்கு மேல் காலவரையின்றி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் பணியாற்றுகிற தொழிலாளர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஓரணி சேர்ந்து போராட அணிவகுத்திட வேண்டுமென்று இக் கூட்டம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

வேறுவழியின்றி, வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுகிற போக்குவரத்துத் தொழிலாளர்களின் வெற்றிக்கு அனைவரும் நல்லாதரவு நல்கிட வேண்டுமென்று இக் கூட்டம் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறது

[8—5—78-ம் நாளன்று சென்னை, பெரியார் திடலில் தமிழகம்முழுவதிலுமுள்ள போக்குவரத்துக் கழகங்களில் இயங்கிக் கொண்டிருக்கிற அனைத்துத் தொழிற் சங்கங்களின் நிர்வாகிகள் — பிரதிநிதிகள் கூட்டம் நடந்தபோது. காட்டூர் கோபால் அவர்களால் முன்மொழியப்பட்டு — அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் தீர்மானத்திலிருந்து]

★

காத்திருக்கும் 'ஏமாளிகள்'

புதிய அமைச்சர்கள் பட்டியலில் தமது பெயர் நிச்சயம் இருக்கும் என்று உறுதியாக நம்பிக்கொண்டிருந்த வடஆற்காடு மாவட்ட வாசி ஒருவர் குட்டி மந்திரிகள் நியமனப்பட்டியலில் கூடத் தமது பெயர் இல்லாமற் போனது கண்டு பெருத்த அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கிறாராம்'

மந்திரிப் பதவி கிடைக்கும் என்று ஓராண்டுக் காலமாகக் காத்திருந்த இன்னும் சில எம்.எல்.ஏக்களும் ஏமாற்றத்துக்குள்ளாகி எரிச்சலடைந்திருக்கிறார்களாம்!

இவர்களையெல்லாம் எப்படித் திருப்தி செய்வது என்பது அ.தி.மு.க மூலவருக்குப் பெரிய தலைவலியை உண்டாக்கியிருக்கிறதாம் அதனால்தான் மேலும் சில புதிய மந்திரிகள் நியமனமும் இருக்கலாம் என்று சூசகமாகத் தெரிவித்தாராம்.

இந்த 'சூசக' அறிவிப்பை நம்பியே இன்னும்சிறிது காலத்துக்கு அந்த 'ஏமாளிகள்' கட்சிக்கு முழுக்குப் போடாமல் இருந்து தொலைப்பார்கள் அல்லவா?

'பொறுத்தது போதும் இனி பொங்கி எழ வேண்டியதுதான்' என்று அந்த வடஆற்காடுவாசி தமது நெருங்கிய நண்பர்களிடமெல்லாம் ஆவேசத்துடன் கூறி வருகிறாராம் தஞ்சை மாவட்ட வாசி ஒருவருக்குப் புதுப் பதவி உருவாக்கித் தருவதாக வாக்களிக்கப்பட்டுள்ளதாம்.

★ ★ ★

பதவியெல்லாம் போனபின்னும்....!

பதவி விநியோகங்களெல்லாம் அநேகமாகமுடிந்து விட்டன. இனிப் பெரிய பதவி ஒன்றும் காலியாக இல்லை புதிதாக உருவாக்கப்படுவதற்கும் ஒன்றுமில்லை.

இந்தக் கட்டத்திலும். மந்திரிப் பதவியோ மந்திரி அந்தஸ்திலான வேறு ஏதேனும் ஒரு பதவியோ தனக்குக் கிடைக்கும் என்று நம்பியிருந்த அ.தி.மு.க. அவைத்தலைவர் தமது மனக்குமுறலை அடக்கிக் கொண்டு பொறுமையாக இருக்கிறாராம்! பாவம் பரிதாபம்!

★ ★ ★

சீட்டுக் கிழிய இருக்கும் மந்திரிகள்!

புது மந்திரிகள் பெயர்ப் பட்டியல் அறிவிப்புக்கு முன். ஏற்கெனவேயுள்ள இரண்டு மூன்று மந்திரிகளை வீட்டுக்கு அனுப்பும் ஏற்பாடும் இருந்ததாம். என்ன காரணத்தாலோ இப்போதைக்கு அது வேண்டாம் என்று நிறுத்திவைக்கப்பட்டதாம். அந்த மந்திரிகளின் பதவி இப்போது இல்லையானாலும் இன்னும் சில மாதங்களில் பறிபோவது உறுதி என்று ஆளுங்கட்சி வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு பிரமுகரே திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார். அவருடைய பெயரை மட்டும் கேட்காதீர்கள்!

★ ★ ★

அமெரிக்கப் பயணம் ரத்து?

முதலமைச்சரின் அமெரிக்கப் பயணம் இப்போதைக்கு இல்லையாம்- அநேகமாகப் பயணம் கைவிடப்பட்டுவிட்டது என்றே சொல்லப்படுகிறது. காரணம், கட்சியையும், ஆட்சியையும் ஒப்படைத்துச் செல்வதற்கு யார் மீதும் இன்னும் மூலவருக்கு நம்பிக்கை ஏற்படவில்லையாம். தாம் வெளிநாட்டிலிருக்கும்போது இங்கு ஏதேனும் நடந்து விடுமோ என்று அஞ்சுகிறாராம் அவர்.

★ ★ ★

'பக்கா' மந்திரிப் பதவி கேட்டவர்!

புதிதாக நியமிக்கப்பட்ட 8 குட்டி மந்திரிகளில் ஒருவர் ஏற்கனவே 'பக்கா' மந்திரிப் பதவி கேட்டு வந்தவராம் அவருக்குக் குட்டி மந்திரிப் பதவி கொடுத்ததும் அவர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாராம். இருந்தாலும், இன்னும் கொஞ்சக் காலத்திற்கு இந்தப்பதவியிலிருங்கள் பிறகு 'பக்கா' மந்திரிப் பதவியே கொடுக்கிறேன் என்று அவரை சமாதானப் படுத்திப் பதவியேற்கச் செய்தாராம் மூலவர்! ஒரு நடிகருக்கே பக்கா மந்திரிப் பதவி கொடுத்திருக்கும் போது சட்டம் படித்த எனக்கு குட்டி மந்திரி பதவியா என அவர் குமுறுகிறாராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால் அழகிரி அச்சகத்தில் (24. சூரியநாராயண செட்டி தெரு. இராயபுரம். சென்னை 600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104-B, அண்ணாசாலை, தேனும்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009.